ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீ தத்வ தீபிகை



ஸ்ரீ பெருந்தேவித்தாயார் – காஞ்சீபுரம்



## ஸ்ரீமத் அழகியசிங்கர்

83வது திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை
முனனிட்டு வெளியிடப்பட்டது.
ஸர்வதாரி வருடம், கார்த்திகை மாதம்,
உத்திரட்டாதி நக்ஷத்ரம் (7-12-2008)



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஸ்ரீ தத்வ தீபிகை



ஸ்ரீ பெருந்தேவித்தாயார் – காஞ்சீபுரம்



ஸ்ரீமத் அழகியசிங்கர்
83வது திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை
முனனிட்டு வெளியிடப்பட்டது.
ஸர்வதாரி வருடம், கார்த்திகை மாதம்,
உத்திரட்டாதி நக்ஷத்ரம் (7-12-2008)



ஸ்ரீ

ஸ்ரீமதே லக்ஷ்மி ந்ருஸிம்ஹ பரப்ருஹ்மணே நம:

# ஸ்ரீ தத்வ தீபிகை

ஸ்ரீமத் அழகிய சிங்கர் 83-வது திருநக்ஷத்ர
மஹோத்ஸவத்தை முன்னிட்டு
வெளியிடப்பட்டது.
(7.12.2008 ஸர்வதாரி வருடம்
கார்த்திகை மாதம் உத்திரட்டாதி நக்ஷத்ரம்)

வெளியீடு: 7-12-2008

விலை: ரூ. 25/-

புத்தகம் கிடைக்குமிடம்.

ராயம் ஸ்ரீதரன் - பத்மலதா ஸ்ரீதரன்
41, ராமசாமி சாலை, கே.கே. நகர்,
சென்னை - 600 078.
போன்: 2366 3014

Printed by:-
RNR Printers & Publishers
No.19, Thandavarayan Street,
Triplicane, Chennai - 600 005
Ph: 28441856, 28447071

**Sri AHOBILA MUTT**
ஸ்ரீ அஹோபில மடம்
Camp 8 A. சாந்தி நகர்,
கிழக்குத் தாம்பரம்,
சென்னை. 600 059.

Sri ______

Date 16-11-2008

॥श्रीमते श्री लक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः॥
॥श्रीमते श्रीवण्शठकोप श्रीवेदान्तदेशिक यतीन्द्र महादेशिकाय नमः॥

ஸ்ரீமதஹோபில மடம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்வாமி திவ்யாஸ்தானத்தில் 45 ஆவது பட்டத்தில் அபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் "ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக" ஸ்ரீவண் சடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகன், அநுக்ரஹிக்கும் ஸ்ரீமுகம்.

— * —

ஆசீர்வாதங்கள்.

நம்முடைய ஸம்ப்ரதாயத்தை ஸித்தாந்தத்தில் உள்ள தத்த்வங்களை அனைவரும் அறிந்து தெளிவு பெறும் வகையில், நம் பூர்வாசார்யர்கள் பலரும் பல க்ரந்தங்களை அருளியுள்ளனர். அவற்றுள் நம் ஆசார்ய ஸார்வபௌமன் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் தமது பல க்ரந்தங்கள் மூலம் நம் ஸித்தாந்தத்தை ஐயம் திரிபற ஸ்தாபித்துள்ளார். [illegible] சது:ஸ்லோகீ வ்யாக்யானத்தில் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஐந்து பக்ஷங்களையும் காட்டி, அவற்றுள் ஒன்றே ப்ரமாணங்களை உடையது என்று ஸாதித்துள்ளார். இந்த ஐந்து பக்ஷங்களுள் ஸ்வாமியின் திருவுள்ளத்திற்கு அமைதியான பக்ஷம் எது? என்பது பற்றிய சர்ச்சையால், [illegible] ஐச்வர்யம், ஜகத்காரணத்வம் முதலானவற்றை அங்கீகரிக்கும் ஐந்தாவது பக்ஷமே ப்ரமாணங்களை உடையது. ஸ்வாமியின் திருவுள்ளமும் அதுவே என்று நிர்த்தாரணம் செய்யும் வகையில் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா'வில் நாம் தொடராக 'ஸ்ரீ தத்த்வதீபிகை' என்று எழுதியுள்ளோம். நடாதூர் அம்மாள் அருளிய ப்ரபந்ந பாரிஜாதம், லக்ஷ்மீ தந்த்ரம், ஸ்ரீபௌஷ்கர ஸம்ஹிதை, அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை, பட்டர் மற்றும் பெரியவாச்சான்பிள்ளை இவர்களின் வ்யாக்யானங்கள் மற்றும் ஸ்வாமி ஸ்ரீ தேசிகனின் ஸ்ரீஸூக்திகள் முதலானவற்றிலிருந்து பல ப்ரமாணங்களை எடுத்துக் காட்டி இதனை நாம் ஸ்தாபித்துள்ளோம்.

தொடராக வந்த இந்த வ்யாஸங்களை ஒரே ஸமயத்தில் வாசித்து, உண்மை நிலையை அனைவரும் உணர வேண்டும் என்ற உயரிய நோக்கில் அவற்றை ஒரு புஸ்தகமாக வெளியிட வேண்டும் என்று நம் ஸ்ரீஸந்நிதியிலும், நம்மிடத்திலும் அளவற்ற பக்தியும், அபிமானமும் உடையவர்களான மதுராந்தகம் ஸ்ரீமான் ஸ்ரீராம் மற்றும் அவருடைய தர்மபத்னீ ஸ்ரீமதி பத்மஸ்ரீ ஆகியோர் நம்மிடம் விஜ்ஞாபித்தனர்

நாமும் மிகுந்த ஸந்தோஷத்துடன் நியமித்தோம். இவர்கள் இருவரையே நம் பூர்வாச்ரமத்திலும், ஸந்யாஸாச்ரமத்திலும் 'ஸ்ரீ நரஸிம்ஹ ப்ரியா' வில் எழுதிய வ்யாஸங்கள் - அருள் மொழிகள் இவற்றிலிருந்து 45 வ்யாஸங்களைத் தொகுத்து 'ஆராத அருளமுதம்' என்ற பெயரிலும், ஸ்ரீ நரஸிம்ஹன் மற்றும் நம் ஆசார்யர்களை 'அழகிய சிங்கரும், அழகிய சிங்கமும்' என்ற பெயரிலும் ஸ்ரீ கோசங்களை வெளியிட்டுள்ளனர்.

நம்முடைய 83 ஆவது திருநக்ஷத்ர மஹோத்ஸவ ஸமயத்தில் வெளிவர இருக்கும் இந்த ஸ்ரீ கோசத்தை அனைவரும் வாங்கி, அனுபவித்து. பரமார்த்த ஸாரமான உண்மை நிலையையும். நம் ஸித்தாந்த ஸாரங்களையும் தெளிவாக உணர வேண்டும், இந்த தம்பதிகள் ஸ்ரீ மாலோலன் க்ருபா கடாக்ஷத்தினால் அநேக தீர்க்காயுஸ்ஸாய் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்திருந்து. நம் ஸம்ப்ரதாயத்திற்கு மேன்மேலும் பல கைங்கர்யங்களைச் செய்து வர வேண்டும் என்று ஆசீர்வதித்து, பல மந்த்ராக்ஷதைகளுடன் இந்த ஸ்ரீ கோசத்தை அனுக்ரஹிக்கிறோம்.

H. H. THE JEER OF
SRI AHOBILA MUTT

श्रीतत्त्वदीपिका चेयं लोकोपकृतयेऽधुना ।
प्रमाणस्नेहसंपन्ना दीप्यते सेव्यतां बुधैः ॥

(ஸ்ரீதத்த்வதீபிகா சேயம் லோகோபக்ருதயேऽதுநா ।
ப்ரமாணஸ்நேஹஸம்பந்நா தீப்யதே ஸேவ்யதாம் புதை: ॥)

நம்முடைய விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் தத்த்வங்களை உள்ளபடி அனைவரும் அறிய வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் மணிப்ரவாள நடையில் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் என்ற ரஹஸ்ய க்ரந்தத்தை அருளி அதில் ஐந்தாவதான தத்த்வத்ரய சிந்தநாதிகாரத்தில் சேதநம், அசேதநம், ஈஶ்வரன் என்ற மூன்று தத்த்வங்களையும் விரிவாக விளக்கி அருளியுள்ளார்.

பரதேவதை யார்? அவருக்கு என்ன சிறப்பு? இத்யாதி விஷயங்களை விளக்குவதற்காக இதற்கு அடுத்த ஆறுவதான பரதேவதாபாரமார்த்த்யாதிகாரத்தையும் விரிவாக அருளியுள்ளார். ஆகவே இந்த இரண்டு அதிகாரங்களையும் யாவரும் நன்கு அறிய வேண்டும் என்பதனால்தான் நாம் இந்த இரண்டு அதிகாரங்களுக்கும் நன்கு விவரித்து அர்த்தம் எழுதியுள்ளோம்.

பிராட்டி - பெருமாள் இருவரும் தம்பதிகளாய், பிராட்டி - பெருமாள் இருவரும் உலகத்திற்கு - ஶேஷிகளாய், ஈஶ்வரர்களாய். உபாயபூதர்களாய் இருக்கிறார்கள் என்று ஒப்புக்கொள்வதில் எவ்வித தோஷமும் வராது.

சதுஶ்ஶ்லோகீ வ்யாக்யாநத்தில் பிராட்டியைப்பற்றிய ஐந்து பக்ஷங்களையும் விளக்கிய ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் இவற்றுள் இந்தப் பக்ஷம்தான் சரி என்று ஒன்றையும் குறிப்பிடாமல் பொதுவில் இந்தப் பக்ஷங்களுள் ஒன்றுதான் ப்ரமாணங்களை உடையது. மற்றவை அப்ராமாணிகங்கள் 'पञ्चस्वेतेषु पक्षेषु कश्चिदेकः प्रमाणवान्' (பஞ்சஸ்வேதேஷு பக்ஷேஷு கஶ்சிதேக: ப்ரமாணவாந்) என்று இவ்வளவேதான் ஸாதித்துள்ளார்.

இதனுல்தான் இதில் பிறர் தலையிட்டுத் தங்கள் கொள்கைக்கு அநுகூலமாயிருக்கும் நான்காவது பக்ஷத்தை எடுத்துக் கொண்டு இதுதான் ஸ்வாமி ஸ்ரீ தேசிகனுக்கு அபிமதமான இஷ்டமான பக்ஷம் என்கிறார்கள்.

பிராட்டி ஈச்வர வகுப்பில் (கோஷ்டியில்) சேர்ந்தவள். பகவான் தன்னைத் தவிர்த்த மற்றைய வஸ்துக்களுக்கு சேஷீ; இவளோ பகவானையும் தன்னையும் தவிர மற்றைய வஸ்துக்களுக்கு சேஷிணீ. ஜகத்துக்குக் காரணமாக இருக்கும் தன்மை, அதாவது ஜகத்காரணத்வம் பகவானுக்கு மட்டுமே உண்டு. பிராட்டியின் பெருமை எல்லாம் பகவத் ஸங்கல்பத்திஞல் ஏற்பட்டது. இதுதான் நான்காவது பக்ஷத்தின் கொள்கை.

இதில் பிராட்டிக்குக் காரணத்வம் முதலானவை கொள்ளப்படாமையால் பிராட்டிக்கு இவை கூடாது என்று சொல்லுபவர்கள் தங்கள் கொள்கையை ஸ்வாமி ஸ்ரீ தேசிகனுக்கும் ஏறிடுவதற்காக இந்த நான்காவது பக்ஷத்தையே ஆதரிக்கிறார்கள். பிராட்டி - பெருமாள் இருவரும் சேர்ந்து ஸங்கல்பித்துக் கொண்டுதான் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறார்கள் என்பதை ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் தம் திருவாக்கிஞலேயே சரம ச்லோகாதிகாரத்தின் ஆரம்பத்தில் உள்ள பாசுரத்தில் 'ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி ஒரு நினைவால் ஈன்ற உலகெல்லாம் உய்ய' என்ற முதலடியால் ஸ்பஷ்டமாக ஸாதித்துள்ளார். பிராட்டி பெருமாள் இருவரும் சேர்ந்தேதான் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறார்கள். ஆகவே ஜகத்காரணத்வம் இருவருக்கும் உண்டு என்பதில் இதைக் காட்டிலும் வேறு ப்ரமாணம் வேண்டாம், இது ஒன்றே போதும்.

இந்தப் பக்ஷங்களுள் ஒன்றுதான் ப்ரமாணங்கள் நிறைந்தது என்று ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் அருளியுள்ள ப்ரமாணங்கள் நிறைந்த பக்ஷம் இந்த ஐந்தாவது பக்ஷமேயாகும். இதில்தான் ஸ்ரீ பராசரர் ஸ்வாமி நம்மாழ்வார் முதலான பூர்வாசார்யர்களுடைய வசநங்களை ப்ரமாணமாகக் காட்டியருள்கிறார். ஆக ப்ரமாணங்கள் நிறைந்த பக்ஷம் இந்த ஐந்தாவது பக்ஷம்தான்.

சிலர் செய்யும் ஆக்ஷேபம்.

ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ கீதையின் அவதாரிகை பாஷ்யத்தின் வ்யாக்யாநத்தில் தாத்பர்ய சந்த்ரிகையில் இந்த ஐந்தாவது பக்ஷத்தைக் கண்டித்திருக்கிறார். அதனால் இந்த ஐந்தாவது பக்ஷம் ஸ்வாமி ஸ்ரீ தேசிகனுக்கு அபிமதம் அன்று - பிடித்தது அன்று என்று சிலர் கூறுகிறார்கள். இது மிகத் தவறானதாகும். தாத்பர்ய சந்த்ரிகையில் உள்ள ஸ்ரீஸூக்திகள் இந்த ஐந்தாவது பக்ஷத்திற்கே அநுகூலங்கள். தாத்பர்ய சந்த்ரிகையில் அங்கு ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் அருளியுள்ள வாக்யங்கள் இவையே.

(1) அநவதிகாதிஶயத்வ வசநாத் ஈஶ்வரவ்யதிரிக்த - அஶேஷ கோசரஸ்யாऽபி ததைஶ்வர்யஸ்ய ஈஶ்வராபிமதத்வாந் ந த்வைராஜ்யாதிதோஷ:

(2) 'அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ' இதி விஷ்ணு பத்நீத்வவேஷேண ஹி ஸர்வஸ்ய ஜகத: இயம் ஈஷ்டே!

(3) 'ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம்' இத்யத்ர து யத்யபி ஸர்வபூதாநாம் இதி ப்ரதிஸம்பந்தி நிர்தேஶாத் ஸ்த்ரீப்ரத்யயாநுஸாரேண ஈஶ்வரபத்நீ விவக்ஷா ந ஶக்யா- ததாऽபி வாக்யாந்தரபலாத் அர்த்தஸ்ய ததாத்வஸித்தி: என்று.

நம் ஸித்தாந்தத்திற்கு ப்ரதாந ஆசார்யர் - தர்ஶந ஸ்தாபகர் ஸ்வாமி எம்பெருமானார் ஆவார்.

இப்படிப்பட்ட ஸ்வாமி எம்பெருமானார் ஶரணாகதி கத்யத்தில் முதலிலும் நடுவிலுமாக இரண்டு இடங்களிலும் ஸ்ரீ கீதையின் அவதாரிகா பாஷ்யத்திலும் பிராட்டியின் குணங்களைச் சொல்லும்போது 'அநவதிகாதிஶய அஸங்க்யேய கல்யாணகுணகணா' என்று அருளியுள்ளார். இந்த எம்பெருமானாரே - எம்பெருமானுடைய கல்யாண குணங்களை அருளிச் செய்யும்போதும் ஸ்வாபாவிக அநவதிகாதிஶய அஸங்க்யேய என்று அவற்றுக்கு விஶேஷணங்களை அடுக்கியுள்ளார். இவற்றுள் 'அநவதிகாதிஶய' என்றது விஶேஷணம் நமக்கு இங்கு முக்யமானது.

ஆக எம்பெருமானுடைய கல்யாண குணங்கள் அநவதிகாதிஶயங்கள் - பிராட்டியினுடைய கல்யாண குணங்களும் அநவதிகாதிஶயங்கள் என்றதாயிற்று.

ஸ்ரீபாஷ்யத்திலும் ப்ரஹ்ம ஶப்தார்த்தத்தை விவரிக்கும் போதும் 'அநவதிகாதிஶய அஸங்க்யேய கல்யாணகுண கண:' என்று 'அநவதிகாதிஶய' என்ற விஶேஷணமிட்டே எம்பெருமானுடைய கல்யாண குணங்களைக் குறிப்பிட்டருளுகிறார்.

தற்போது 'அநவதிகாதிஶய' என்ற ஶப்தத்தின் பொருள் என்ன என்பதை முதலில் அறிய வேண்டும்.

இங்கு கத்ய வ்யாக்யாநத்தில் பெரியவாச்சான் பிள்ளை பிராட்டியின் குணங்களுக்கு இட்ட விஶேஷணமான 'அநவதிகாதிஶய' என்ற பதத்திற்கு "இவைதான் ஒரொன்றே அபரிச்சேத்யமாயிருக்கும். பிராட்டியின் குணங்களான ஜ்ஞாநம் - பலம் - ஐஶ்வர்யம் ஆகியவை ஒவ்வொன்றுமே இவ்வளவுதான் என்று அளவிட முடியாதவையாயிருக்கும், என்று வ்யாக்யாநம் செய்திருக்கிறார்.

இந்தப் பெரியவாச்சான் பிள்ளையே எம்பெருமானுடைய கல்யாணகுணங்களுக்கு விஶேஷணமாய் அமைந்த 'அநவதிகாதிஶய' என்ற பதத்திற்கு நிஸ்ஸீமமுமாய் ஆஶ்சர்யகரமுமாயிருக்கும் என்று அர்த்தம் அருளியுள்ளார். அதாவது எல்லையற்றன்வாயும். ஆஶ்சர்யத்தை உண்டு பண்ணுகின்றனவாகவும் இருக்கை அநவதிகாதிஶயத்வம் என்று அர்த்தம் கூறியுள்ளார். இரண்டு இடங்களிலும் சொன்னது ஒரே மாதிரியேயாகும்.

ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் தாமியற்றிய கத்ய பாஷ்யத்தில் = பிராட்டியின் குணங்களுடைய விஶேஷணமான 'அநவதிகாதிஶய' என்ற பதத்திற்கு अनवधिकत्वमिह - स्वापेक्षया उत्कर्षावधिरहितत्वम् 'அநவதிகத்வம் இஹ ஸ்வாபேக்ஷயா உத்கர்ஷாவதிரஹிதத்வம்' என்று. 'அநவதிகாதிஶய' என்ற சொல் பிராட்டியின் குணங்களுக்கு விஶேஷணம். பெருமாளைப் பற்றிச் சொல்லும்போதும் அநவதிகாதிஶய என்ற விஶேஷணம் பெருமாளுடைய குணத்திற்கு விஶேஷணம்.

இது பஹுவ்ரீஹி ஸமாஸம் கொண்டது. அநவதிக: அதிஶய: யேஷாம் தே - அநவதிகாதிஶயா:, குணா: என்று ஆகிறது. இந்த விக்ரஹ வாக்யத்தில் அநவதிக: என்றது அதிஶயத்திற்கு விஶேஷணமாகிறது. அதிஶயம் - பெருமை - சிறப்பு. இது அநவதிகம் என்றால் அவதி - எல்லை. அதில்லாதது என்றபடி. இதற்குமேல் பஹுவ்ரீஹி ஸமாஸத்தினால் எல்லையில்லாத பெருமையை - சிறப்பை உடையவை குணங்கள் என்பது கிடைக்கிறது. அநவதிகம் என்ற சொல்லுக்குப் பொருள்தான் மேலே காட்டிய ஸ்வாவதிக உத்கர்ஷ ரஹிதத்வம் என்பது. இதன் அர்த்தம் - தன்னைவிட உயர்வு அற்றது. தன்னை என்பது அதிஶயத்தை - அதாவது பிராட்டியின் கல்யாண குணங்களுடைய சிறப்பு தன்னைவிட மேம்பட்ட சிறப்பு அற்றது. மற்றையோருடைய குணங்களின் அதிஶயம் - தன்னைவிட மேம்பட்ட சிறப்பை உடையது. சதுர்முகனுடைய குணத்தின் பெருமை தன்னை விட மேம்பட்ட எம்பெருமானுடைய கல்யாணகுணங்களின் பெருமையை உடையது. அதாவது சதுர்முகனுடைய குணங்களைவிட எம்பெருமானுடைய கல்யாணகுணங்கள் சிறந்திருக்கின்றன என்றபடி. இம்மாதிரி எம்பெருமானுடைய கல்யாண குணங்களைவிடச் சிறந்த கல்யாணகுணங்கள் வேறு யாருக்கும் கிடையாது, அன்றோ!

இவ்வாறே பிராட்டியின் குணங்களையும் அநவதிகாதிஶயம் - எல்லையற்ற பெருமையை உடையவை என்று எம்பெருமானார் கத்யத்தில் அருளிச் செய்துள்ளார்.

இப்படி ஸ்வாமி எம்பெருமானார் அருளிச் செய்யவேதான் பிராட்டியின் குணத்திற்கும் சிறப்பு சொல்ல வேண்டியுள்ளது.

ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ஸ்ரீ கீதையின் அவதாரிகா பாஷ்யத்தில் இவ்விஷயம் பற்றி ஆரம்பிக்கும்போதே 'அநவதிகாதிஶயத்வவசநாத்' என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அருளியதையே ப்ரமாணமாகக் காட்டித்தான் இந்த விஷயத்தை ஆரம்பிக்கிறார்.

அதன் கருத்தை நன்கு உணர வேண்டும். முதலில் இங்கு (1) என்று எண்ணிட்டுக் காட்டிய வாக்யத்தை இப்படி அந்வயித்துப் பார்க்க வேண்டும். அது பின் வருமாறு:-

अनवधिकातिशयत्ववचनात् लक्ष्म्याः ऐश्वर्यमपि
ईश्वरव्यतिरिक्ताशेषगोचरं इत्यभ्युपगन्तव्यम् ।
अथाप्यस्याः ईश्वरव्यतिरिक्ताशेषगोचरस्य
ऐश्वर्यस्य ईश्वराभिमतत्वात् न द्वैराज्यादिदोषः ॥

(அநவதிகாதிஶயத்வ வசநாத் லக்ஷ்ம்யா: ஐஶ்வர்யமபி ஈஶ்வர வ்யதிரிக்த அஶேஷ கோசரம் இத்யப்யுபகந்தவ்யம். அதாப்யஸ்யா: ஈஶ்வரவ்யதிரிக்த அஶேஷ கோசரஸ்ய ஐஶ்வர்யஸ்ய ஈஶ்ராபிமதத்வாத் ந த்வைராஜ்யாதி தோஷ:) என்று.

*எம்பெருமான் தன்னைத் தவிர்த்த மற்றைய யாவற்றையும் நியமிக்கிறான். அதுபோலவே பிராட்டியும் எம்பெருமானைத் தவிர்த்த மற்றைய யாவற்றையும் நியமிக்கிறாள் என்றே கொள்ள வேண்டும். இதற்குக் காரணம் ஸ்வாமி எம்பெருமானார் 'ஸ்ரீஸூக்திதான்'. ஸ்வாமி எம்பெருமானார் கத்யத்திலும் ஸ்ரீ கீதையின் அவதாரிகை பாஷ்யத்திலும் பிராட்டியினுடைய ஐஶ்வர்யத்தையும் அநவதிகாதிஶயம் - எல்லையற்ற மேன்மையை உடையது என்று அருளியிருக்கிறார் அன்றோ !*

*ஆக ஸ்வாமி எம்பெருமானார் இப்படிப் பிராட்டியினுடைய ஐஶ்வர்யத்தையும் அதாவது நியமந ஸாமர்த்யத்தையும் பெருமாளுடையது போலவே அநவதிகாதிஶயம் என்று அருளிச் செய்துள்ளமையால் பிராட்டியும் எம்பெருமானைத் தவிர்த்த மற்றைய அனைத்தையும் ஆள்கிறாள் என்றே ஒப்புக்கொள்ள வேண்டும் என்றபடி.*

*இதற்குமேல் வரும் கேள்விக்குப் பதில் அருளுகிறார். இதில் மேல் வாக்யத்தினால்.*

*கேள்வி - உலகுக்கு எம்பெருமானைப்போல் பிராட்டியும் ஈஶ்வரீ. (உலகத்தை முழுவதும் ஆள்பவள்) என்றால் ஒரு உலகுக்குப் பெருமாள் - பிராட்டி என்று இரண்டு ராஜாக்களை - இரண்டு ஈஶ்வரர்களை ஒப்புக் கொண்டதாகிவிடும். இதனால்*

உலகுக்கு அநர்த்தம்தானே விளையும் என்ற கேள்வி இதற்குப் பதில்

அருளுகிறார் - பிராட்டி உலகம் முழுவதையும் தன்னை (பகவானைப்)போல் ஆள்வது எம்பெருமானுக்கு அபிமதமானதே - இஷ்டமானதே. பிராட்டி எம்பெருமானுக்குப் பத்நியாயிருப்பதால் அதீனையாயிருப்பதால் அவளும் தன்னைப்போல் உலகை ஆள்வது இவனுக்கு இஷ்டமானதே. பதிக்கும் பத்நிக்கும் அபிப்ராயம் ஒன்றாகவே இருக்குமாதலால் இவர்களிடையே கருத்து வேற்றுமை இராமையால் உலகுக்கு எவ்விதமான அநர்த்தமும் நேராது என்று பதில் அருளுகிறார்.

வெவ்வேறான கருத்துக்களையுடைய இரண்டு அரசர்கள் ஒரு நாட்டை ஆளும்போதுதான் அவர்களுடைய ஆட்சிக்கு உட்பட்ட நாடு கேடு அடையும்.

இதற்கும் மேலே ஒரு கேள்வி வர அதற்குப் பதில் சொல்லத்தான் அடுத்த வாக்யம் (2 என்று தந்துள்ளது) பிறக்கிறது தாத்பர்ய சந்த்ரிகையில்.

பிராட்டி உலகம் அனைத்தையும் ஆளும்போதும் விஷ்ணுவுக்குப் பத்நியாகத்தான் - அதாவது எம்பெருமானுக்குப் பரதந்த்ரையாகவே இருந்து கொண்டுதான் ஆள்கிறாள் என்று சொல்ல முடியுமா! உலகில் கல்யாணம் ஆன பெண் ஒருத்தி ஒரு ஆயிரம் ரூபாய்களில் ஒரு பதவியை வஹித்தால் அந்தப் பெண்ணை பர்த்தாவுக்கு அதீநமாக நடப்பதில்லை என்பதைப் பார்த்துத்தானே வருகிறோம். அம்மாதிரி உலகத்தை ஆளும்போதும் பிராட்டி தன் பர்த்தாவான எம்பெருமானுக்கு அதீனையாக இருப்பாளா? இப்படி இல்லாமல் ஸ்வதந்த்ரையாக அரசாண்டால் இருவருக்கும் இடையே கருத்து வேற்றுமை உண்டாகி உலகம் கெட்டுவிடும் அன்றோ? என்ற கேள்வி வர 'அப்படி அன்று. ஜகத் முழுவதையும் ஆளும்போதும் விஷ்ணுவுக்குப் பத்நியாக (பரதந்த்ரையாக) இருந்து கொண்டேயன்றோ அரசாள்கிறாள். 'அஸ்ய ஈஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ' என்ற ஶ்ருதி ஒன்று விஷ்ணு பத்நீ - ஸதீ

- விஷ்ணு பத்நியாக அதாவது விஷ்ணுவுக்குப் பரதந்த்ரையாக அதீநையாக இருந்து கொண்டேதான் 'அஸ்ய ஜகத: ஈமாநா' - இந்த உலகுக்கு ஈஸ்வரீ ஆகிறுள், என்று கூறுகிறது.

இங்கு பத்நி என்ற பதம் உறவு முறையை மட்டும் கூறவில்லை. பத்நித்வத்தால் ஏற்பட்ட பாரதந்த்ர்யத்தைக் கூறுகிறது. ஆகவே விஷ்ணுவுக்கு அதீநையாக இருந்து கொண்டேதான் பிராட்டி உலகுக்கு ஈஸ்வரீயாகிறுள். ஆகையால் பிராட்டி உலகத்தை ஆளும்போதும் விஷ்ணுவுக்குப் பரதந்த்ரையாய் இருக்கும் நிலை நீடித்திருப்பதால் இவர்களுக்குள் கருத்து வேற்றுமை வராது.

இதற்குமேல் மற்ருேர் கேள்வி வர அதற்குப் பதில் கூற வந்தது 3வது எண் இட்டுள்ள மூன்ருவது வாக்யம்.

விஷ்ணுவுக்குப் பத்நியாக இருந்து கொண்டுதான் அரசாள்கிறுள் பிராட்டி என்பது உறுதிப்பட்டால் ஈஸ்வரியாயிருக்கும்போதும் அவள் பெருமாளுக்கு அதீநை; அதனுல் கருத்து வேற்றுமை வராது என்று சொல்லலாம்.

மற்ருேர் ஸ்ருதியையும் பார்க்க வேண்டும்.

'ஈஸ்வரீம் ஸர்வபூதாநாம்' என்பதே அந்த ஸ்ருதி. இந்த ஸ்ருதி ஸர்வபூதங்களையும் ஒரு பெண் ஆள்கிறுள், அவள்தான் லக்ஷ்மீ. என்றிவ்வளவு மட்டுமேதான் கூறுகிறது இந்த ஸ்ருதி வாக்யம். இதைப் பார்க்கும்போது விஷ்ணுவுக்குப் பத்நியாய் - அதீநையாய் இருந்து கொண்டுதான் பிராட்டி உலகத்தை ஆள்கிறுள் என்று சொல்ல முடியாதே என்பது கேள்வி.

ஈஸ்வரீ என்ற சொல் பிராட்டிக்குப் பெயராயிற்றே. ஆக ஈஸ்வரீ என்ற பெயரைக் கொண்டே ஈஸ்வரனுக்குப் பத்நீ என்பது கிடைக்கிறது. இதனுல் விஷ்ணுவுக்கு அதீநையாய்தான் அரசாள்கிறுள் என்று சொல்வதற்கில்லை. ஈஸ்வரீ என்ற சொல் மட்டும் தனித்து வந்தால் இப்போது கூறியதுபோல் விஷ்ணுவின் பத்நீ என்ற பொருள் கிடைக்கும். ஆனுல் ஈஸ்வரீ என்ற சொல் மட்டும் தனித்து வரவில்லை. இவளால் ஆளப்படும் பொருள்களைக் குறிக்கும் சொல் ஒன்றும் கூடவே வந்துள்ளது இந்த ஸ்ருதியில். அந்தச் சொல் ஸர்வபூதாநாம் என்பதேயாம்.

ஆக 'ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம்' என்ற ஶ்ருதியில் ஸர்வபூதாநாம் என்ற ப்ரதிஸம்பந்திச் சொல் - ஆளப்படும் வஸ்துக்களைக் குறிக்கும் சொல் உள்ளது. இந்தச் சொல் இருப்பதால் ஈஶ்வரீ என்ற சொல் நாமாவாக - அதாவது பெயராக இருக்க முடியாது. ஆகவே ஸர்வபூதங்களையும், ஸர்வவஸ்துக்களையும் ஆள்கின்றவள் ஒரு ஸ்த்ரீ என்பதுதான் கிடைக்கும். ஆகவே இந்த ஶ்ருதியினால் விஷ்ணுவுக்குப் பத்நியாயிருப்பவள் உலகத்தை ஆள்கிறாள் என்ற அர்த்தம் கிடைக்காதே என்ற கேள்வி உண்டாகிறது. இதற்குப் பதில் - ஆம்! கேள்வியில் குறிப்பிட்டுள்ளபடி ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம் என்ற ஶ்ருதியில் உள்ள ஈஶ்வரீ என்ற சொல் விஷ்ணுபத்நீ என்ற பொருளைத் தராது என்பது உண்மைதான். விஷ்ணுபத்நியாயிருப்பவள் உலகத்தை ஆள்கிறாள் என்ற அர்த்தம் இந்த ஶ்ருதியினால் கிடைக்காமற் போகட்டுமே.

'அஸ்ய ஈஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ' என்ற ஒரு ஶ்ருதியினாலேயே முன் கூறிய அர்த்தம் கிடைக்கிறது. அதுவே போதும்.

ஆகப் பிராட்டி விஷ்ணு பத்நீ என்ற தன்மையோடேதான் அதாவது பர்த்தாவான விஷ்ணுவுக்கு அதீனையாக இருந்து கொண்டேதான் உலகத்தை ஆள்கிறாள். இதனால் இவளுடைய ஆட்சி எம்பெருமானுக்கு மிகவும் உகந்தது ஆகும். ஆகையால் ஈரரசு படாது உலகம் என்று இந்த ஐந்தாவது பக்ஷத்தையே ஆதரித்துள்ளார் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன்.

இப்படியிருக்க "தாத்பர்ய சந்த்ரிகையில் ஐந்தாவது பக்ஷத்தை ஸ்வாமி ஸ்ரீதேசிகன் இங்குக் கண்டித்துள்ளார்; ஆகையால் நான்காவது பக்ஷத்தைத்தான் ஸ்ரீ தேஶிக ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்தவர்கள் ஆதரிக்க வேண்டும்" என்று கூறுவது மிகவும் தவறானதாகும்.

தாத்பர்ய சந்த்ரிகையில் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் அருளியுள்ள ஸ்ரீஸூக்திகளின் தாத்பர்யத்தை ஒவ்வொரு வாக்யத்திற்கும் அவதாரிகை வைத்து நாம் விளக்கியுள்ளோம் அனைவருக்கும் புரியும் வகையில். இதில் உள்ள 'பத்நீத்வவிஶிஷ்டவேஷேண ஹி ஸர்வஸ்ய ஜகத: இயம் ஈஷ்டே' என்று உள்ள

வாக்யத்திற்கு ஶாஸ்த்ரீயமான முறையிலும் ஸம்ஸ்க்ருத ஶப்தத்தின் இயல்புக்கு ஏற்பவும் பொருள் கூறியுள்ளோம். இதைவிட்டு 'பத்நீத்வவிஶிஷ்டவேஷேண' என்பதற்கு 'விஷ்ணு பத்நியாயிருக்கும் காரணத்திஞல்' என்று அர்த்தம் கொண்டு சிலர் விளக்கம் கூறியுள்ளனர். இவ்வாறு அர்த்தம் கொள்ள வேண்டுமாஞல் அப்போது विष्णुपत्नीत्वाद्धि जगतः इयं ईष्टे (விஷ்ணு பத்நீத்வாத்வாத்ஹி ஜகத: இயமீஷ்டே) என்று வாக்யம் அமைந்திருக்க வேண்டும். ஆஞல் அவ்வாறில்லை. பின்பு 'विष्णुपत्नीत्व विशिष्टवेषेण हि सर्वस्य जगतः इयमीष्टे' (விஷ்ணு பத்நீத்வ விஶிஷ்டவேஷேண ஹி ஸர்வஸ்ய ஜகத: இயம் ஈஷ்டே) என்று அமைந்துள்ளது. 'விஷ்ணுபத்நீத்வ விஶிஷ்ட வேஷேண....' என்பதற்கு விஷ்ணு பத்நீத்வத்துடன் கூடியே உலகம் அனைத்தையும் ஆள்கிருள் பிராட்டி என்றுதான் அர்த்தம். இது ஶாஸ்த்ரம் அறிந்தவர்கள் ஆதரிக்கும் பொருள். 'வேஷம்' என்ற சொல் ஸம்ஸ்க்ருதத்தில் ரூபம் என்ற அர்த்தத்தில் வருவதுண்டு. விஷ்ணு பத்நீத்வ விஶிஷ்ட ரூபேண என்றும் சொல்லலாம். தமிழில் வகை - தன்மை என்றவாருன அர்த்தங்களிலும் வேஷ ஶப்தம் வழங்கப்படுகிறது. விஷ்ணு பத்நீத்வ விஶிஷ்டையாக இருக்கும் வகையோடு அல்லது விஷ்ணுபத்நீத்வ விஶிஷ்டையாயிருக்கும் தன்மையோடு என்றிவ்வாறு அர்த்தம் கொள்ளப்படும்.

பிறர் கூறும் வகையில் விஷ்ணுவுக்குப் பத்நியாய் இருப்பதால் அன்றே பிராட்டி அனைத்துலகையும் நியமிக்கிருள் என்று பொருள் கொண்டாலும் இது ஐந்தாவது பக்ஷத்திற்கு பாதகமாகாது. இதஞல் ஐந்தாவது பக்ஷம் கண்டிக்கப்பட்டதாகாது.

யுக்திகளைக் காட்டாமல், விளக்கமும் இல்லாமல் ஐந்தாவது பக்ஷம் 'கண்டிக்கப்பட்டு விட்டது' என்று சிலர் சொல்லுவதஞலேயே இது கண்டிக்கப்பட்டதாகாது.

மேலும் இந்த ஐந்தாவது பக்ஷம் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் உகந்தது என்பது மட்டுமன்று, பட்டரும் உகந்ததாகும்.

ஸ்ரீ பட்டர் அருளிய லக்ஷ்மீ கல்யாணம் என்ற காவ்யத்தில் முதல் மங்கள ஸ்லோகம் ஒன்று ப்ரஸித்தமானது. ஸ்வாமி ஸ்ரீ தேஸிகனால் ப்ரமாணமாகக் கையாளப்பட்டுள்ளது. அந்த ஸ்லோகம் பின் வருமாறு :-

अनन्याधीनकल्याणं अन्यमङ्गलकारणम् ।
जगन्निदानं अद्वन्द्वं द्वन्द्वं वन्दामहे महः ॥

அநந்யாதீநகல்யாணம் அந்யமங்களகாரணம்।
ஜகந்நிதாநம் அத்வந்த்வம் த்வந்த்வம் வந்தாமஹே மஹ: ॥

பட்டர் இயற்றியதாக நாம் கூறும் லக்ஷ்மீ கல்யாணம் என்ற க்ரந்தம் தற்போது கிடைக்கவில்லை என்ற காரணத்ினால் இந்த ஸ்லோகத்தைச் சிலர் ப்ரமாணமாகக் கொள்வதில்லை. இப்படிப் பார்த்தால் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் தென்கலை - வடகலை என்கிற உபய ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த பூர்வாசார்யர்கள் அனைவருமே ப்ரமாணமாகக் காட்டியுள்ள ஸ்லோகங்கள் பலவும் கூடத் தற்போது கிடைப்பதில்லை என்று அவையும் அப்ரமாணங்களாக முடியும். ஆகவே பூர்வாசார்யர்கள் காலத்தில் அவை இருந்துள்ளன என்று கொண்டுதான் அவற்றை நாம் அனைவரும் ஆதரித்து வருகிறோம்.

இதில் நாம் ஒரு த்வந்த்வத்தை - மிதுநத்தை (இரட்டையை) வணங்குகிறோம் என்கிறார் பட்டர். அந்த த்வந்த்வம் - மிதுநம் எப்படிப்பட்டது? என்றால் அதை விளக்க அந்த த்வந்த்வத்திற்கு அநேக விஸேஷணங்களைத் தருகிறார் - அநந்யாதீந கல்யாணம், அந்ய மங்கள காரணம், ஜகந்நிதாநம், அத்வந்த்வம் என்பவையே அந்த விஸேஷணங்கள். இங்கு த்வந்த்வம் என்பது பெருமாள் என்ற இரட்டையை அதாவது இருவரைக் குறிக்கிறது.

**முதல் விஸேஷணம் - அநந்யாதீந கல்யாணம்:** வேறு எவர்க்கும் அதீநமல்லாமல், தமக்கே உரியனவான ஸ்வாபாவிகமான கல்யாண குணங்களை உடையது இந்த மிதுநம். பெருமாளும் பிராட்டியும் பிறர்க்கு அதீநமல்லாத கல்யாண குணங்களை உடையவர்கள் என்றபடி.

*இரண்டாவது விஶேஷணம் - அந்யமங்கள காரணம் :* தங்கள் இருவரைத் தவிர்த்த மற்றைய அனைவர்களுடையவும் கல்யாண குணங்களுக்குக் காரணமாயிருப்பது - இந்த மிதுநம். சதுர்முகன், ஶிவன் முதலான அனைவர்களுடைய கல்யாண குணங்களுக்கும் நன்மைகளுக்கும் காரணமாயிருப்பவர்கள் பெருமாளும் பிராட்டியும் ஆகிற இந்த மிதுநமே ஆகும்.

*மூன்றுவது விஶேஷணம் - ஜகந்நிதாநம்:* உலகுக்குக் காரணமாயிருப்பதும் இந்த மிதுநமேயாகும். உலகுக்குக் காரணமாயிருப்பவர்கள் பெருமாளும் பிராட்டியுமாகிய இருவர்களும்.

*நான்காவது விஶேஷணம் - அத்வந்த்வம்:* த்வந்த்வம் அற்றது. இணையற்றது - ஈடற்றது. இந்த த்வந்த்வத்திற்கு ஒப்பான மற்றோர் த்வந்த்வம் கிடையாது என்றபடி. பெருமாள் பிராட்டி இவ்விருவருக்கும் ஒப்பானவர்கள் வேறு எவரும் இல்லை என்றபடி.

இதில் ஜகந்நிதாநம், த்வந்த்வம் என்பதுதான் இங்கு முக்யமானது. பெருமாள் பிராட்டி இருவருமே ஜகத்துக்குக் காரணமானவர்கள் என்பது இதனால் கூறப்பட்டது. இருவருமே ஜகத்துக்குக் காரணம் என்பதால் இருவரும் ஜகத்துக்கு முக்யமான காரணமாயிருப்பவர்கள்தான் என்றே பொருள்படும். இதில் பெருமாளுக்கு முக்யமான காரணத்வம், பிராட்டிக்கு அமுக்யமான, அப்ரதாநமான காரணத்வம் என்ற பொருள் ஏற்படவே ஏற்படாது. இந்த ஶ்லோகம் ஸ்வதந்த்ரமாக அர்த்தம் கூற வரவில்லை. ஶ்ருதிகளில் கூறப்பட்ட அர்த்தத்தை விவரிப்பதற்காகத்தான் வந்துள்ளது. இது மட்டுமே அன்று. பூர்வாசார்யர்கள் அருளிய ஸ்தோத்ரங்கள் யாவுமே ஶ்ருதியில் சொன்ன தத்த்வங்களை யாவரும் எளிதில் அறியலாம்படி விளக்க வந்தனவேயாகும்.

இந்த முறையில்தான் இந்த ஶ்லோகத்தில் உள்ள ஜகந்நிதாநம் என்ற விஶேஷணமும் ஶ்ருதியில் ப்ரஸித்தமான அர்த்தத்தையே கூற வந்துள்ளது.

ஶ்ருதியில் எம்பெருமானைப் போலவே பிராட்டிக்கும் ஜகத் காரணத்வமும் ஜகந்நியந்த்ருத்வமும் கூறப்பட்டுள்ளன.

'ईशानो भूतभव्यस्य' (ஈஶாநோ பூதபவ்யஸ்ய) 'முக்காலத்திய பொருள்களையும் ஆள்பவன் எம்பெருமான்' என்று எம்பெருமானை ஸர்வபூதங்களுக்கும் ஈஶ்வரன் என்கிறது இந்த ஶ்ருதி. இம்மாதிரியேதான் பிராட்டியும் ஸர்வபூதங்களுக்கும் ஈஶ்வரீ என்பதை 'ईश्वरीं सर्वभूतानाम्' (ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம்) என்ற ஶ்ருதி சொல்லுகிறது.

இப்படியேதான் ஜகத் காரணத்வமும் பிராட்டி பெருமாள் இருவருக்கும் உண்டு என்பதும் மற்றோர் ஶ்ருதியினால் கிடைப்பதேயாகும்.

'आनीद् अवातं स्वधया तदेकम्' (ஆநீத் அவாதம் ஸ்வதயா ததேகம்) என்ற ஶ்ருதியினால் பிராட்டிக்கும் ஜகத் காரணத்வம் உண்டு என்று கூறப்பட்டதாகிறது.

இதில் 'ஸ்வதா' என்ற ஶப்தம் பிராட்டியைக் குறிக்கிறது.

ஸ்ரீபாஷ்யத்தில் இரண்டாவது அத்யாயத்தில் நான்காவது பாதத்தில் மூன்றாவது அதிகரணம் ப்ராணாணுத்வாதிகரணம் என்பதாகும். இந்த அதிகரணத்தில் 'श्रेष्ठश्च' (ஶ்ரேஷ்டஶ்ச) என்ற இரண்டாவதான ஸூத்ரத்தில் முக்ய ப்ராணனுக்கு உத்பத்தி உண்டு என்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஜீவராஶிகள் வாழ்வதற்குக் காரணமான ப்ராணன் முக்ய ப்ராணன் எனப்படும். இதற்கு உத்பத்தி உண்டு என்பது ஸித்தாந்தம்.

''இதற்கு உத்பத்தி கிடையாது. இது நித்யம். உலகம் அனைத்தும் அழிந்தபோதும் இந்த முக்ய ப்ராணன் மட்டும் ப்ரளய காலத்திலும் தனித்து இருக்கிறது. ஆகவே இது நித்யம். இதுதான் உலகத்திற்குக் காரணம் ஆகிறது. आनीद् अवातं स्वधया तदेकम् (ஆநீத் அவாதம் ஸ்வதயா ததேகம்) என்ற உபநிஷத்வாக்யம் இதற்கு ப்ரமாணம்'' என்று பூர்வபக்ஷி சொல்கிறான்.

ஸ்வாமி எம்பெருமானார் இந்த பூர்வபக்ஷத்தை மறுத்து முன் கூறிய ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் ஸித்தாந்தத்தை அருளிச் செய்துள்ளார். அது பின் வருமாறு:-

முக்ய ப்ராணன் நித்யம் அன்று. அதற்கு உத்பத்தி உண்டு. ஆகவே அது ஜகத்துக்குக் காரணமாக முடியாது என்று அருளியுள்ளார். அவன் மேற்கோள் காட்டியுள்ள அந்த ஶ்ருதியின் பொருளும் அவன் கூறியபடி அன்று. आनीत् (ஆநீத்) என்ற பதம் ஜீவாத்மாவுடன் ஶரீரத்துள் இருக்கும் ப்ராணவாயு என்கிற முக்ய ப்ராணனைக் குறிக்கவில்லை. பரமாத்மா மட்டுமே இருப்பதைக் குறிக்கிறது இந்த 'आनीत्' (ஆநீத்) என்ற பதம். இப்படி ப்ரளயத்தில் இருக்கும் வஸ்து - பொருள் - स्वधया (ஸ்வதயா) பிராட்டி (லக்ஷ்மி)யுடன் இருக்கிறது. ஆகக் காற்று முதலாக ஏதும் இல்லாத ப்ரளய காலத்தில் எம்பெருமான் பிராட்டியுடன் கூட ஒருவனாக இருக்கிறான். அவன்தான் உலகத்துக்குக் காரணம் என்கிறது இந்த ஶ்ருதி என்று அருளியுள்ளார் ஸ்ரீ பாஷ்யகாரர்.

இவ்விடத்தில் ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகை என்ற வ்யாக்யாநத்தில் स्वधया....इत्यनेन लक्ष्मीविशिष्टत्वम् उच्यते, (ஸ்வதயா இத்யநேந லக்ஷ்மீ விஶிஷ்டத்வம் உச்யதெ) ஸ்வதயா என்றதால் ப்ரளய காலத்தில் இருக்கும் எம்பெருமான் லக்ஷ்மியுடன் இருக்கிறான் என்பது சொல்லப்படுகிறது என்று அருளிச் செய்யப்பட்டிருப்பதை நன்கு அறிய வேண்டும்.

(आनीदवातं स्वधया तदेकम्) (ஆநீத் அவாதம் ஸ்வதயா ததேகம்) என்ற இந்த வாக்யம் காரண வஸ்துவைக் குறிக்கும் வாக்யம். இதில் காரணபூதனான எம்பெருமானுக்குப் பிராட்டியின் சேர்த்தி கூறப்பட்டிருப்பதால் பெருமாள் பிராட்டி இருவருமே தான் ஜகத்துக்குக் காரணம் என்பது கிடைக்கிறது.

நம் ஸித்தாந்தத்தில் நம் பூர்வாசார்யர் காட்டியுள்ள அர்த்தங்கள் பல ஶ்ருதிகளில் ஸ்பஷ்டமாகக் கூறப்படவில்லை என்று பிறர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். ஆனாலும் ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்கள் முதலியவற்றைக் கொண்டுதான் பூர்வாசார்யர்கள் உபதேஶித்துள்ள அர்த்த விஶேஷங்களை நாம் (உபய கலையாரும்) ஸ்தாபித்தும் ஆதரித்தும் வருகிறோம். ஆனாலும் இந்த வழி பிற மதத்தினருக்கு த்ருப்தியை

உண்டுபண்ணுவதில்லை - உண்டு பண்ணவில்லை. பிறர்களிடம் உபய கலையாருமாகிய நாம் படும் பாடுகளை இப்போது ஸ்ரீ தேஶிக ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த நாம் ஏகதேஶிகளானவர்களிடம் படுகிறோம். ஸ்ரீ வைஷ்ணவர்கள் கூறும் ஏற்புடைய பதில்களைப் பிறர் காதில் வாங்கிக் கொள்ளாமலேயே தாங்கள் கூறியதையே கூறி வருகிறார்கள். இதேபோல் இப்போது ஸ்ரீ தேஶிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த பல மஹான்கள் ஏற்கனவே ப்ரமாணங்களுடன் ஸாதித்துள்ள விஷயங்களைக் கொஞ்சமும் காதில் போட்டுக் கொள்ளாமல் மனதில் கொள்ளாமல் தாங்கள் கொண்டதையே கூறி வருகிறார்கள்.

'ஆநீத் அவாதம் ஸ்வதயா ததேகம்' என்ற வாக்யத்தில் ஜகத் காரணமான வஸ்து லக்ஷ்மியுடன் கூடியுள்ளது என்று கூறப்பட்டதைக் கொண்டு பிராட்டிக்கும் ஜகத் காரணத்வம் உண்டு என்று கிடைக்கிறது என்பதால் மட்டும் அந்தச் சிலர் த்ருப்தி அடைய மாட்டார்கள்.

இதற்குச் சார்பாகப் பல ப்ரமாணங்கள் உள்ளன. அவற்றையும் கொண்டுதான் ஶ்ருதிகளின் அர்த்தத்தை நாம் தெளிய வேண்டும்.

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் 8வது அத்யாயத்தில் உள்ள ஒரு ஶ்லோகத்தை இங்கு நாம் நன்கு அறிய வேண்டும். அந்த ஶ்லோகம் பின் வருமாறு:—

एकधा च द्विधा चैव तैस्तैः श्रुत्यब्धिपारगैः ।
व्यपदिश्यावहे शास्त्रे तावावां सर्वकारणम् ॥

(ஏகதா ச த்விதா சைவ தைஸ்தை: ஸ்ருத்யப்திபாரகை:।
வ்யபதிஸ்யாவஹே ஸாஸ்த்ரே தாவாவாம் ஸர்வகாரணம்॥)

எம்பெருமான் விஷ்வக்ஸேநருக்கு உபதேஸிக்கிறர் : "கடல் போல் விரிந்து கிடக்கும் ஸ்ருதிகளின் கரையைக் கண்ட மஹான்கள் - அதாவது பல வகைப்பட்ட ஸ்ருதிகளின் பொருள்களை நன்கு அறிந்துள்ள மஹான்கள், என்னையும் (எம்பெருமானையும்) பிராட்டியையும் ஒன்ருகவும் கூறுவார்கள். பிரித்தும் தனித்தனியே கூறுவார்கள். இப்படி ஒன்ருகவும் வேருகவும் கூறப்படும் நாங்கள் இருவருமே ஸர்வஜகத்துக்கும் காரணம் ஆகிறேம்" என்பது இதன் பொருள்.

ஸ்ருதியின் பொருளுக்கு முரண்படாத வகையில் ஸ்ம்ருதிகள் கூறும் பொருள்களையும் கொள்ள வேண்டும் என்பது நம் ஸித்தாந்தத்தில் உண்டு. 'श्रद्धया देवो देवत्वं अश्नुते' (ஸ்ரத்தயா தேவோ தேவத்வம் அஸ்நுதே) ஸ்ரத்தா என்ற சொல் பிராட்டியைக் கூறுகிறது. இங்கு 'அதேவோ' என்றும் பதம் பிரித்துக் கூறுவர்.

தேவத்வம் அஸ்நுதே - தேவனுயிருக்கும் தன்மையைப் பிராட்டியினுல் பெறுகிறுன் எம்பெருமான். தேவத்வம் - தேவனுயிருக்கும் தன்மை 'दिवु क्रीडायाम्' (திவு க்ரீடாயாம்) என்ற தாதுவிலிருந்து உண்டான சொல் 'தேவ:' என்பது. ஆக 'தேவத்வம்' என்ற பதம் க்ரீடை - விளையாடல் என்ற பொருளைத் தருகிறது. பிராட்டியினுல் எம் பெருமான் விளையாட்டைப் பெறுகிறுன் - புரிகிறுன் - செய்கிறுன் என்று கூறப்பட்டதாகிறது. என்ன விளையாடலைப் பெறுகிறுன்? என்பதையும் ஆராய வேண்டும்.

'உலகம் யாவையும் தாம் உளவாக்கலும் நிலை பெறுத்தலும் நீக்கலும்' ஆகிய அலகிலா - எண்ணமுடியாத பற்பல திருவிளையாடல்களைப் புரிகிறுன். அதாவது பிராட்டியுடன் கூட இருந்து கொண்டு எம்பெருமான் ஜகத்தை ஸ்ருஷ்டித்தல், ரக்ஷித்தல், ஸம்ஹரித்தல் முதலான விளையாடல்களைச் செய்கிறுன் என்றபடி.

இதனால் ஜகத்ஸ்ருஷ்டி முதலானவற்றை எம்பெருமான் பிராட்டி இருவருமே செய்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

இங்கு முன்பு காட்டிய ''तौ-आवां-सर्वकारणम् (தௌ-ஆவாம்-ஸர்வகாரணம்) அப்படிப்பட்ட நாங்கள் இருவருமே எல்லாவற்றுக்கும் காரணம்'' என்று கூறும் அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வசநத்தைக் கொண்டு आनीत् अवातं स्वधया तदेकम् (ஆநீத அவாதம் ஸ்வதயா ததேகம்) श्रद्धया देवो देवत्वं अश्नुते (ஶ்ரத்தயா தேவோ தேவத்வம் அஶ்நுதே) என்ற ஶ்ருதிகளின் வாக்யார்த்தத்தை நன்கு அறியவேண்டும். அப்போதுதான் எம்பெருமானைப் போலவே பிராட்டியும் ஸர்வஜகத்துக்கும் காரணம் ஆகிறாள் என்பது நன்கு விளங்கும். 'ஆநீத் அவாதம் ஸ்வதயா' என்ற ஶ்ருதியில் உள்ள 'ஸ்வதா' என்ற ஶப்தம் स्वधा त्वं लोकपावनी (भाविनी) (ஸ்வதா த்வம் லோகபாவநீ (भाவிநீ) உலகத்தைப் படைத்துக் காக்கும் அவளான மஹாலக்ஷ்மீ எனப்படுபவள் நீயே ஸ்வதா என்று கூறப்படுகிறாய் என்று ஸ்ரீ பராஶரர் தாம் அருளிய புராண ரத்நமாகிய ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் அருளிச்செய்திருப்பதை ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் சதுஶ்ஶ்லோகீ பாஷ்யத்தில் நன்கு அருளியுள்ளார். ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகாசார்யரும் காட்டியுள்ளார் என்பது முன்னமே கூறப்பட்டுள்ளது.

இவ்விஷயத்தை ஸுப்ரஸித்தவைபவம் உடைய மஹாவித்வான் ஸ்ரீ உ.வே. கரூர் ஸ்வாமி தாம் அருளிய ஸித்தாந்தஸாரம் என்ற அத்புதமான க்ரந்தத்தில் மற்றும் பல ப்ரமாணங்களுடன் மத்யஸ்த த்ருஷ்டியுடன் அருளிச் செய்துள்ளார்.

ஸ்ரீ பாஞ்சராத்ர ஶாஸ்த்ரத்தில் லக்ஷ்மீதந்த்ரத்தில் ஐந்தாவது அத்யாயத்தில் உள்ளவற்றையும் பிறர் நன்கு கவனிக்க வேண்டும். அவையாவன:

'महान् नाम समाख्यातः विकारः पूर्वतो बुधैः ।
महान्तमाविशत्येनं प्रेरयामि सिसृक्षया ॥

प्रेर्यमाणात् ततस्तस्मात् अहङ्कारश्च जज्ञिवान् ।
आविश्याऽहं अहङ्कारं सृष्टये प्रेरयाम्यहम् ।
स बभूव त्रिधा पूर्वं गुणव्यतिकरात् तथा ॥

(மஹாந் நாம ஸமாக்யாத: விகார: பூர்வதோ புதை: ।
மஹாந்தம் ஆவிஶ்யேநம் ப்ரேயாமி ஸிஸ்ருக்ஷயா ॥
ப்ரேர்யமாணாத் ததஸ்தஸ்மாத் அஹங்காரஶ்ச ஜஜ்ஞிவாந் ।
ஆவிஶ்யாऽஹம் அஹங்காரம் ஸ்ருஷ்டயே ப்ரேரயாம்யஹம் ।
ஸ பபூவ த்ரிதா பூர்வம் குணவ்யதிகராத் ததா ॥)

*இது பிராட்டி அருளிச்செய்த வாக்கு. ஆகவே இதில் வரும் "அஹம்" (நான்) என்ற சொல் பிராட்டியைக் குறிப்பதாகும். பிராட்டி கூறுகிறாள்:*

*முதலில் ப்ரக்ருதியிலிருந்து பிறந்த விகாரம் 'மஹாந்' என்று பண்டிதர்களால் கூறப்படுகிறது. ஸ்ருஷ்டியின் ஆரம்ப காலத்தில் உலகத்தை ஸ்ருஷ்டிக்க வேண்டும் என்ற விருப்பத்தினால் ப்ரக்ருதியை நான் தூண்ட அது 'மஹாந்' என்ற தத்வத்தை வ்யாபிக்கிறது. பிறகு அந்த 'மஹாந்' என்ற தத்வத்தை நான் தூண்ட அதிலிருந்து 'அஹங்காரம்' என்ற தத்வம் பிறக்கிறது.*

*அந்த அஹங்காரத்துக்குள்ளும் நான் புகுந்து அதைத் தூண்டிவிட அந்த அஹங்காரம் 'ஸத்த்வம்-ரஜஸ்-தமஸ்' என்ற மூன்று குணங்களின் ஏற்றத் தாழ்வுகளால் ஸாத்த்விகாஹங்காரம், ராஜஸாஹங்காரம், தாமஸாஹங்காரம் என்று மூன்றாக ஆகிறது என்று பிராட்டியினுடைய திருவாக்கினாலேயே எம்பெருமானுக்குப்போலவே அவனுடன் கூடியிருக்கும் தனக்கும் (பிராட்டிக்கும்) ஜகத்காரணத்வம் உண்டு என்பது ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது.*

*இவ்விஷயம் ரத்நபேடிகை என்ற ந்யாயஸித்தாஞ்ஜந வ்யாக்யாநத்தில் ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமியும் ஸாரபோதிநீ என்ற ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரவ்யாக்யாநத்தில் ஸ்ரீமத் இஞ்சிமேடு அழகியசிங்கரும் அருளியுள்ளார்கள்.*

*ஆக முன் காட்டப்பட்ட* 'आनीदवातं स्वधया तदेकं' (ஆநீத் அவாதம் ஸ்வதயா ததேகம்) *என்ற ஶ்ருதியின் அர்த்தம்*

லக்ஷ்மீ தந்த்ரத்தில் உள்ள இந்த வசநத்தினுலும் விளக்கப் பட்டதாகிறது. இப்படி ஸ்வதா ஶப்தத்தினுல் கூறப்படும் லக்ஷ்மீயுடன் கூடியவன் 'தத் ஏகம்' ஒருவனுகவே இருக்கிறுன் என்று நன்கு காட்டுகிறது. ஆநீத் அவாதம் என்ற ஶ்ருதி.

பூர்வர்கள் காட்டியுள்ள ஐதிஹ்யம் ஒன்று:

ஆளவந்தார் அருளிய சதுஶ்ஶ்லோகியின் வ்யாக்யாநத்தில் பெரியவாச்சான்பிள்ளை 'ஈஷத் த்வத்கருணுநிரீக்ஷண' என்ற மூன்றுவது ஶ்லோகத்தின் வ்யாக்யாநத்தில் ஒரு ஐதிஹ்யம் (வரலாறு) காட்டியுள்ளார். அதாவது:

"இன்னமும் பிராட்டிக்கு ஜகத்காரணத்வத்திலே அந்வயம் உண்டோ? என்று நடாதூர் அம்மாள் பிள்ளானைக் கேட்க ஆவதென் ? இவ்வர்த்தத்தில் ஸந்தேஹம் உண்டோ? आवाभ्यां कर्माणि कर्तव्यानि, प्रजाश्चोत्पादयितव्याः (ஆவாப்யாம் கர்மாணி கர்த்தவ்யாநி, ப்ரஜாஶ்ச உத்பாதயிதவ்யா:) நாமிருவரும் சேர்ந்து கர்மாக்களைச் செய்வோம். ப்ரஜைகளையும் உண்டு பண்ணுவோம் என்றன்றே இருப்பது? இவள் ஸஹதர்மசாரிணியன்றே ! என்றருளிச்செய்தார் பிள்ளான்.

இதே இடத்தில் நாயனுராச்சான்பிள்ளை என்பவரும் தம்முடைய உரையில் இந்த ஐதிஹ்யத்தை இப்படியே காட்டியுள்ளார். இங்குள்ள வாக்யங்கள்:

"இப்படி ஜகத்காரணத்வத்தில் இவளுக்கு (பிராட்டிக்கு) அந்வயம் உண்டோ? என்று ப்ரஶ்நம் பண்ணிய நடாதூர் அம்மாளைக் குறித்துப் பிள்ளான் அருளிச்செய்த வார்த்தையை அநுஸந்திப்பது. அதாவது - இவ்வர்த்தத்தில் ஸந்தேஹம் உண்டோ? ஆவாப்யாம் கர்மாணி கர்த்தவ்யாநி, ப்ரஜாஶ்ச உத்பாதயிதவ்யா: என்று ப்ரமாணம் சொல்லுகையாலே ஸஹதர்மசாரிணியான இவளுக்கும் அந்வயம் உண்டு' என்று அருளிச் செய்தது'' என்று.

ஆவாப்யாம் கர்மாணி கர்த்தவ்யாநி என்ற வாக்யம் விவாஹ ப்ரகரணத்திலே உள்ளது.

பெரியவாச்சான்பிள்ளையும் - நாயனாராச்சான்பிள்ளையும் எடுத்துக்காட்டிய இந்த ஐதிஹ்யத்தினால் எம்பெருமானைப் போலவே பிராட்டிக்கும் ஜகத்ஸ்ருஷ்டி என்ற கார்யத்தில் கர்த்ருத்வம் - காரணத்வம் உண்டு என்பது ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டதாகிறது. இந்த ஐதிஹ்யம் அடுத்து மறுக்கப்படவில்லை.

பிறர்கள் இந்த ஐதிஹ்யத்திற்கு என்ன அர்த்தம் சொல்வார்களோ? அவர்கள் சொல்வது இருக்கட்டும் மத்யஸ்தர்களுக்கு - நடுநிலையாளர்களுக்கு இதனால் எளிதில் புலப்படும் அர்த்நம் பிராட்டிக்கும் ஜகத்காரணத்வம் உண்டு என்பதேயாம்.

இவ்விஷயத்தில் ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமி ரத்நபேடிகை என்ற க்ரந்தத்தில் அருளிச் செய்துள்ளதையும் எடுத்துக் காட்டுகிறோம். முதலில் அங்குள்ள ஸம்ஸ்க்ருத வாக்யங்களின் அர்த்தத்தை அப்படியே தமிழில் தருகிறோம்.

கேள்வி :- பிராட்டியை விஷ்ணுபத்நீ என்று வேதமும் கூறுகிறது. உலகில் நாமும் கூறுகிறோம். இங்கு பத்நி என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? பகவானுக்குப் பத்நீ என்றால் பகவானுக்கு ஶேஷமாயிருப்பவள் - அதாவது பத்நீத்வம் பகவத் ஶேஷத்வரூபம் என்றால் அசேதநப் பொருள்களும் எம்பெருமானுக்கு ஶேஷமாயிருப்பதால் அவற்றையும் விஷ்ணுபத்நீ என்றே சொல்ல நேரும். ஆனால் யாரும் அம்மாதிரி கூறுவதில்லை.

விஷ்ணுபத்நீ என்றால் ஶேஷமாயிக்கும் சேதநவஸ்து - அதாவது சேதநத்வே ஸதி ஶேஷத்வம் என்றால் அசேதநங்கள் விஷ்ணுவுக்கு ஶேஷமாயிருந்தாலும் சேதநங்கள் அல்லாமையால் அவற்றை விஷ்ணுபத்நீ என்று கூறமுடியாது. ஆனாலும் சேதநர்களான ஜீவாத்மாக்கள் அனைவருமே விஷ்ணுவுக்கு ஶேஷபூதர்களாக இருப்பதால் பிராட்டியை மட்டுமன்று; ஜீவர்கள் அனைவரையும் கூட விஷ்ணுபத்நீ எனச் சொல்ல வேண்டிவரும். ஆக விஷ்ணுஶேஷத்வம் - விஷ்ணுபத்நீத்வம் என்றோ சேதநத்வே ஸதி விஷ்ணுஶேஷத்வம், விஷ்ணு பத்நீத்வம் என்றோ சொல்லமுடியாது.

விவாஹம் :- கல்யாணம் என்ற சடங்கினுல் ஸம்ஸ்காரம் (தகுதி) பெற்றிருக்கைதான் பத்நீத்வம். உலகிலும் விவாஹம் என்ற கர்மாவை அநுஷ்டித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பெண்ணைத்தான் பத்நீ என்று கூறுகிருேம். அம்மாதிரியே விவாஹம் என்ற சடங்கினுல் ஸம்ஸ்காரம் பெற்றிருத்தல்தான் பத்நீத்வம். ஆக எம்பெருமான் விவாஹம் செய்துகொண்டு பிராட்டியை அங்கீகரித்துள்ளமையால் அவள் விஷ்ணுவுக்குப் பத்நீ ஆகிருள். இப்படிச் சொல்வதில் எவ்வித அவ்யவஸ்தையும் வராது என்று கூறுவதும் சரியன்று. பூர்வபக்ஷி இதையும் மறுக்கிருன்.

உலகில் உள்ளதுபோல் ஸ்ரீ விஷ்ணுவுக்கும் பிராட்டிக்கும் பதி-பத்நிபாவத்தை - பதி-பத்நீ என்ற உறவு முறையைக் கொண்டால் இவ்விருவருக்கும் உள்ள இந்த பதி-பத்நிபாவம் அநித்யமாக நேரிடும்.

விவாஹம் என்ற சடங்கினுல் ஒரு பெண் ஒரு புருஷனுக்குப் பத்நியாவது எப்பொழுது? இருவரும் பிறந்து பல வருஷங்கள் கழிந்த பிறகே விவாஹம் செய்கிருர்கள். ஒரு பையனுக்கு 25 வயது. ஒரு பெண்ணுக்கு 20 வயது. இந்த வயதில் இவ்விருவர்களுக்கும் விவாஹம் நடக்கிறது. இதற்குமுன் அந்தப் பெண் இவனுக்குப் பத்நி ஆவதில்லை.

விவாஹத்தினுல் பதியும்-பத்நியும் ஆனவர்கள் கூடச் சிலர் சில காரணங்களினுல் இந்த உறவை முறித்துக் கொள்கிருர்கள். முறித்துக்கொள்ள முடியும். இதன்படிப் பார்த்தால் விவாஹத்தினுல் ஏற்படும் பத்நீத்வம் (பத்நியாயிருக்கை) உலகில் அநித்யமாகக் காணப்படுகிறது. இம்முறையில் பெருமாளுக்குப் பிராட்டி பத்நியாயிருப்பதும் - அதாவது விஷ்ணுபத்நீத்வமும் அநித்யமாக இருக்க வேண்டிவரும். ஆகப் பிராட்டிக்கு விஷ்ணுபத்நீத்வம் உண்டு என்பதை எவ்விதத்திலும் விளக்கிக் கூறமுடியாது என்ற கேள்வி நிற்கிறது.

பதில்:- ஶேஷத்வம் அல்லது சேதநத்வே ஸதி ஶேஷத்வம் அல்லது விவாஹத்தினுல் தகுதி (ஸம்ஸ்காரம்) பெற்றிருக்கை பத்நீத்வம் என்றே சொல்லவில்லை. வேறு ஒரு வகையில்

பத்நீத்வத்தை விளக்கிக் கூறுகிறோம். அதாவது ஶாஸ்த்ரீய ஸங்கல்ப விஶேஷவிஷயத்வம்தான் பத்நீத்வம் என்று.

கந்யகாதாநம் செய்யும் ஸமயத்தில் அந்தப் பெண்ணை மணக்கவிருக்கும் புருஷன் அவளை நோக்கி 'நாமிருவரும் சேர்ந்து க்ருஹஸ்தனுக்குரிய கர்மாக்களைச் செய்வோம். ப்ரஜைகளையும் உண்டு பண்ணுவோம்' என்று ஸங்கல்பம் செய்து கொள்கிறான். அவளும் இதற்கு ஸம்மதிக்கிறாள். பிறகு அவள் இவனுக்குப் பத்நியாயிருக்கும் தன்மையைப் பெறுகிறாள். புருஷன் செய்யும் ஸங்கல்பத்தில் இவளும் சேர்ந்திருப்பதால் - அதாவது விஷயமாயிருப்பதால் இவள் பத்நியா யிருக்கும் தகுதியைப் பெறுகிறாள். ஆக இம்மாதிரியான குறிப்பிட்ட ஸங்கல்பத்தில் விஷயமாய் இருக்கைதான் பத்நீத்வம்.

இம்மாதிரியான ஸங்கல்பம் உலகில் நான் கழித்துச் செய்து கொள்கிறான் புருஷன். பிறகு முறிந்தும் விடுவதுண்டு.

ஆனால் பகவானுடைய ஸங்கல்பம் நித்யமானது. இவனும் பிராட்டியுடன் சேர்ந்து 'ஆவாப்யாம் கர்மாணி கர்த்தவ்யானி, ப்ரஜாஶ்ச உத்பாதயிதவ்யா:' என்று ஸங்கல்பித்துக் கொள்கிறான். இந்த ஸங்கல்பம் நித்யமானது. ஆகையால் பிராட்டிக்கு விஷ்ணுபத்நீத்வம் நித்யமாகவே இருக்கிறது. ஒருக்காலும் அநித்யமாவதில்லை. ஆக விஷ்ணுபத்நீத்வமாவது எம்பெருமான் செய்து கொள்ளும் आवाभ्यां कर्माणि कर्तव्यानि, प्रजाश्च उत्पादयितव्याः (ஆவாப்யாம் கர்மாணி கர்த்தவ்யானி ப்ரஜாஶ்ச உத்பாதயிதவ்யா:) என்ற ஸங்கல்பத்தில் விஷயமாயிருக்கைதான் என்று விளக்கம் கொண்டால் எவ்விதமான தோஷமும் கிடையாது என்பதுதான் பதில்.

ஒருவன் தன் இஷ்டப்படி வழியில் செல்லும் எவளோ ஒருத்தியை இழுத்து வைத்துக் கொண்டு இவ்வாறு ஸங்கல்பம் செய்து கொள்வதால் அவள் அவனுக்குப் பத்நியாக மாட்டாள். இந்த ஸங்கல்பம் ஶாஸ்த்ர ஸம்மதமாக இருக்கவேண்டும். ஆகவே ஶாஸ்த்ரீய ஸங்கல்ப விஶேஷ விஷயத்வமேவ பத்நீத்வம் என்பது தீர்ந்த விளக்கமாகும்.

இங்கு எம்பெருமான் தன் பத்நியான பிராட்டியுடன் சேர்ந்து செய்யும் கர்மாக்கள் - ஜகத்ரக்ஷணம் முதலான

கர்மாக்கள், 'ப்ரஜாஸ்ச உத்பாதயிதவ்யா:' என்பது ஜகத் ஸ்ருஷ்டியைக் குறிக்கிறது.

உலகில் புருஷன் செய்யும் வைதிக கர்மாக்களில் பத்நிக்கும் கர்த்ருத்வம் ஶாஸ்த்ர ஸம்மதமாகும். இவ்வாறே எம்பெருமான் செய்யும் ஜகத்ரக்ஷணம் - ஜகத்ஸ்ருஷ்டி இவற்றில் பிராட்டிக்கும் கர்த்ருத்வம் உண்டு - என்று ஸித்திக்கிறது (கிடைக்கிறது).

புருஷன்-பத்நீ இருவரும் சேர்ந்து செய்யும் கார்யங்களில் புருஷனுக்குப் போலவே பத்நிக்கும் துல்யமான கர்த்ருத்வம் உண்டு என்பதைப் பூர்வமீமாம்ஸையில் ஆறுவது அத்யாயத்தில் ஜைமிநிஸூத்ரபாஷ்யத்தில் ஶபர ஸ்வாமி நன்கு விவரித்துள்ளதாக ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமி, ஸ்ரீமத் பரகால ஸ்வாமி இருவரும் தம் தம் உரைகளில் விவரித்துள்ளனர். ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் அருளிய ந்யாய - ஸித்தாஞ்ஜநத்தில் மூலத்திலேயே இதுபற்றி அருளியுள்ளார்.

ஆக இவ்வளவால் ஜகத்ஸ்ருஷ்டி முதலியவற்றில் பிராட்டிக்கும் காரணத்வம் - அதாவது ஜகத்காரணத்வம் உண்டு என்பதற்கு வேண்டிய ப்ரமாணங்கள் காட்டப்பட்டுள்ளன.

பெரியவாச்சான்பிள்ளை, நாயனாராச்சான்பிள்ளை இருவரும் காட்டியுள்ள அந்த ஐதிஹ்யம் ஒன்றே பிராட்டிக்கும் ஜகத்காரணத்வம் உண்டு என்பதற்குப் போதுமான ப்ரமாணமாக உள்ளது.

பிராட்டிக்கு ஜகத்காரணத்வத்திலும் அந்வயம் உண்டோ? என்ற நடாதூர் அம்மாள் கேள்வியும் இவ்வர்த்தத்தில் ஸந்தேஹம் உண்டோ? என்று தொடங்கி 'ஆவாப்யாம் கர்மாணி கர்தவ்யாநி, என்ற ப்ரமாணத்தையும் காட்டி இவள் ஸஹதர்மசாரிணீயன்றோ' என்று உபபத்தியையும் காட்டிக் குருகைப்பிரான் பிள்ளை அருளிச் செய்துள்ள பதிலும் ஸந்தேஹமில்லாமல் பிராட்டிக்கும் ஜகத்காரணத்வம் உண்டு என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. இந்த ஐதிஹ்யம் பிறர்கள் வெளியிட்டுள்ள க்ரந்தத்திலேயே ஸ்பஷ்டமாக இருக்கிறது.

ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த ஸர்வஜ்ஞரான ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமியும் "ஆவாப்யாம் கர்மாணி ஆசரிதவ்யாநி" என்ற இதே ப்ரமாணத்தையே காட்டிப் பிராட்டிக்கு ஜகத்காரணத்வத்தை விவரித்துள்ளமையைப் பிறர்களும் அவர்களைப் பின்பற்றுபவர்களும் கவனிக்க வேண்டும்.

லக்ஷ்மீதந்த்ரம், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை முதலான பல க்ரந்தங்களில் பிராட்டியின் பெருமை விரிவாகக் கூறப் பட்டுள்ளது என்று ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் ஸாதித்துள்ளார். அவற்றை நன்கு அறிந்தால் பிறர் கேள்விகள் வீணானவை என்பது நன்கு புலனாகும்.

சிற்சில ஶ்லோகங்களை மட்டும் இங்கு காட்டுகிறோம். அஹிர்புத்ந்யஸம்ஹிதையில் ஆறாவது அத்யாயத்தில்:

ताविमावेकधैवोक्तौ भेय-भेदकभावतः ।
पृथक्त्वेन तु शास्त्रेषु जगद्धेतुतयोदितौ !
नैव शक्त्या विना कश्चित् शक्तिमानस्ति कारणम् ।
न तु शक्तिमतश्शक्तिः विना काप्यवतिष्ठते ॥
तत्तद्गौरवमाश्रित्य तन्त्रवेदान्तपारगैः ।
जगद्धेतुतया देवावेकैकाविव दर्शितौ ॥

பிராட்டி பெருமாள் இருவரையும் ஒன்றுபடுத்தியும் கூறுகிறார்கள். இதற்குக் காரணம் ஒருவர் பேத்யர் (भेद्यர்) மற்றொருவர் பேதகர் (भेदकர்). ஒருவர் வ்யாவர்த்யர், மற்றொருவர் வ்யாவர்த்தகர். அதாவது எம்பெருமானை மற்றைய தேவதைகளைவிட வ்யாவ்ருத்தராக - வேறுபட்டவராக அறிவதற்குக் காரணமாயிருப்பவள் பிராட்டி. பிராட்டியின் ஸம்பந்தத்தைக் கொண்டுதான் எம்பெருமானை - மற்றைய தேவதைகளைவிட விலக்ஷணமாகப் புரிந்து கொள்ள முடியும். அப்போதுதான் பரதேவதை யார்? என்பது தெளிவாக விளங்கும். ஆகவே பிராட்டியின் ஸம்பந்தத்தினால் வ்யாவர்த்யர் - விலக்ஷணமாக இருப்பவர் எம்பெருமான்.

ஆக இம்முறையைக் கொண்டு பெருமாளையும் பிராட்டியையும் ஒன்றுபடுத்திக் கூறுகின்றன ஶாஸ்த்ரங்கள்.

இப்படி எம்பெருமானை மற்றைய தேவதைகளைக் காட்டிலும் விலக்ஷணனாக வேறுபட்டவனாகக் - காட்டுகிறவள் பிராட்டி. அதாவது பரதேவதை ஸ்ரிய:பதியான நாராயணன்தான் என்பதைக் காட்டுகிறாள் பிராட்டி என்றபடி.

ஆகவே இவள் வ்யாவர்த்திகை (व्यावर्तिகை) எனப்படுகிறாள். உலகிலும் வ்யாவர்த்தகமானது தன்னை உடையவனை மற்றைய வஸ்துக்களைவிட வேறுபடுத்திக் காட்டும். இந்த வ்யாவர்த்தகமானது பண்பாய் - தர்மமாய் (धर्मமாய்) இருக்கும். இதனால் மற்றையவற்றைக் காட்டிலும் விலக்ஷணமாக அறியப்படும் வஸ்து தர்மியாய் (धर्मीயாய்) - அதாவது பண்பை - தர்மத்தை உடையதாயிருக்கும்.

இவ்விரண்டினுள் வ்யாவர்த்தக (व्यावर्तक) மான தர்மத்தை உடைய பொருள் தர்மியாய்-ப்ரதாநமாய் இருக்கும். வ்யாவர்த்தகமான தர்மமானது (பண்பானது) தன்னை உடைய தர்மிக்கு விசேஷணமாய் அதனுள் அடங்கி இருக்கும். ஆகவே தர்மம் - தர்மி, அதாவது வ்யாவர்த்தகம் - வ்யாவர்த்யம் என்று இரண்டு வஸ்துக்களாய் இருந்த போதும் தர்மிக்குள் மற்றொன்றான தர்மம் அடங்கியிருக்கும். இந்தக் காரணத்ினால் தர்மம்-தர்மி இரண்டையும் ஒன்றாக - அதாவது தர்மத்தைக் குறிக்கும் சொல் தனியாக இல்லாமலேயே தர்மியைக் குறிக்கும் சொல் ஒன்றை மட்டுமே கொண்டு இவ்விரண்டையும் குறிப்பார்கள்.

'ஸூர்யன்' என்று சொன்னால் இந்த ஒரு சொல்லாலேயே ஸூர்யனை விட்டுப் பிரியாமல் அவனுக்கு வ்யாவர்த்தகமாய் அதாவது சந்த்ரன் முதலான மற்றைய ஒளிப் பொருள்களைக் காட்டிலும் ஸூர்யனுக்கு உள்ள வேறுபாட்டைக் காட்ட வல்லதாய், ஸூர்யனுக்கு அப்ருதக்ஸித்த (अपृथक्सिद्ध) விசேஷணமாய் அதற்குள் அடங்கி இருக்கும் ப்ரபையும் தன்னைக் குறிப்பதற்கென்று தனியே ஒரு சொல் வேண்டாதபடி ஸூர்யன் என்ற சொல்லாலேயே கூறப்பட்டதாகிறது.

இவ்வாறேதான் பிராட்டியும் பெருமாளுக்கு வ்யாவர்த்திகையாய் அவனுக்கு அப்ருதக்ஸித்த விசேஷணமாக இருப்பதால் தன்னைக் குறிப்பதற்கென்று தனியே ஒரு சொல்

வேண்டாதபடித் தன்னை உடைய எம்பெருமானைக் குறிக்கும் சொல் ஒன்றாலேயே கூறப்பட்டவளாகிறாள்.

இவ்விஷயத்தைத்தான் முன்பு காட்டப்பட்ட அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் உள்ள ஶ்லோகத்தின்

'ताविमावेकयैवोक्तौ भेद्य-भेदकभावतः'

(தாவிமாவேகதைவோக்தெள பேத்ய பேதகபாவத:) என்ற பூர்வார்தம் விளக்குகிறது.

பிராட்டி - எம்பெருமான் என்ற இவ்விருவர்களுடைய ஸ்வரூபம் ஸ்வபாவம் இவை வேறாக இருப்பதைக் கொண்டு இவ்விருவர்களையும் வெவ்வேறான இரண்டு சொற்களைக் கொண்டும் கூறலாம் என்பதை

'पृथक्त्वेन तु शास्त्रेषु जगद्धेतुतयोदितौ'

(ப்ருதக்த்வேந து ஶாஸ்த்ரேஷு ஜகத்தேதுதயோதிதெள) என்ற முன் காட்டிய ஶ்லோகத்தின் உத்தரார்த்தம் கூறுகிறது.

ஒன்றாகக் கூறினாலும் வேறு வேறாகக் கூறினாலும் இருவரும் ஜகத்துக்குக் காரணமாய் இருப்பவர்களேயாவர் என்கிறது இந்த ஶ்லோகம்.

பிராட்டி எம்பெருமானுடைய ஶக்தி ஆவாள். ஶக்தி என்றால் உருவம் இல்லாதவளாக இருக்க வேண்டும் என்பதில்லை. எம்பெருமானை விட்டுப் பிரிக்க முடியாதபடி அவனுடன் ஒன்றி இருக்கும் தன்மை காரணமாக இவளை ஶக்தி என்று கூறுகிறார்கள். இந்த ஶக்தியை உடையவன் இந்த ஶக்தியின்றி ஒருபோதும் தனித்து இருக்கமாட்டான். இந்த ஶக்தியும் தன்னை உடையவனை விட்டுத் தனித்து இராது. இப்படி இருவருக்கும் உள்ள இந்த அப்ருதக்ஸித்தி (தனித்துப் பிரிந்து இருக்க முடியாத நிலையாகிற) ஸம்பந்தம் காரணமாகப் பிராட்டியை ஶக்தி என்றும், எம்பெருமானை ஶக்திமான் என்றும் கூறுகிறார்கள்.

இவ்விருவர்களுக்கும் தனித்தனியான சிறப்பும் உள்ளது. அதாவது :-

வேண்டாதபடித் தன்னை உடைய எம்பெருமானைக் குறிக்கும் சொல் ஒன்றாலேயே கூறப்பட்டவளாகிறாள்.

இவ்விஷயத்தைத்தான் முன்பு காட்டப்பட்ட அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் உள்ள ஶ்லோகத்தின்

'ताविमावेकथैवोक्तौ भेद्य-भेदकभावतः'

(தாவிமாவேகதைவோக்தௌ பேத்ய பேதகபாவத:) என்ற பூர்வார்தம் விளக்குகிறது.

பிராட்டி - எம்பெருமான் என்ற இவ்விருவர்களுடைய ஸ்வரூபம் ஸ்வபாவம் இவை வேறாக இருப்பதைக் கொண்டு இவ்விருவர்களையும் வெவ்வேறான இரண்டு சொற்களைக் கொண்டும் கூறலாம் என்பதை

'पृथक्त्वेन तु शास्त्रेषु जगद्धेतुतयोदितौ'

(ப்ருதக்த்வேந து ஶாஸ்த்ரேஷு ஜகத்தேதுதயோதிதௌ) என்ற முன் காட்டிய ஶ்லோகத்தின் உத்தரார்த்தம் கூறுகிறது.

ஒன்றாகக் கூறினாலும் வேறு வேறாகக் கூறினாலும் இருவரும் ஜகத்துக்குக் காரணமாய் இருப்பவர்களேயாவர் என்கிறது இந்த ஶ்லோகம்.

பிராட்டி எம்பெருமானுடைய ஶக்தி ஆவாள். ஶக்தி என்றால் உருவம் இல்லாதவளாக இருக்க வேண்டும் என்பதில்லை. எம்பெருமானை விட்டுப் பிரிக்க முடியாதபடி அவனுடன் ஒன்றி இருக்கும் தன்மை காரணமாக இவளை ஶக்தி என்று கூறுகிறார்கள். இந்த ஶக்தியை உடையவன் இந்த ஶக்தியின்றி ஒருபோதும் தனித்து இருக்கமாட்டான். இந்த ஶக்தியும் தன்னை உடையவனை விட்டுத் தனித்து இராது. இப்படி இருவருக்கும் உள்ள இந்த அப்ருதக்ஸித்தி (தனித்துப் பிரிந்து இருக்க முடியாத நிலையாகிற) ஸம்பந்தம் காரணமாகப் பிராட்டியை ஶக்தி என்றும், எம்பெருமானை ஶக்திமான் என்றும் கூறுகிறார்கள்.

இவ்விருவர்களுக்கும் தனித்தனியான சிறப்பும் உள்ளது. அதாவது :-

ஶக்திக்கு ஆதாரமாயிருந்து கொண்டு அதன் இருப்பு காரணமாக எம்பெருமானிருக்கிறுன் என்ற பெருமை எம்பெருமானுக்கு உண்டு. அவனை இதர வ்யாவ்ருத்தமாகக் காட்டி, அதாவது அவனைத் தவிர்த்த மற்றைய அனைத்தையும்விட இவனை வேறுபட்டவனுகக் காட்டுகிறுள் பிராட்டி என்ற காரணத்திஞல் பிராட்டி எம்பெருமான் இருவரையும் தனித் தனியாகவும் வேத-வேதாந்த வல்லுநர்கள் கூறுவார்கள். அதே ஸமயத்தில் இருவரையும் சில வகைகளில் ஸமப்ரதாநராயும் கூறுவார்கள். ஆயினும் இருவரும் ஜகத்துக்குக் காரணபூதர்களேயாவர் என்பதை முன் காட்டிய அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை ஶ்லோகங்களில் ('தத்தத் गौरவம் ஆஶ்ரித்ய') என்ற வாக்யம் தெளிவாகக் கூறுகிறது.

விவக்ஷா விஶேஷத்திஞல் - ஒரு கருத்தின் காரணமாகப் பிராட்டி - பெருமாள் இருவரையும் தனித்தும் கூறுவார்கள். மற்ருேர் விவக்ஷா விஶேஷத்திஞல் மற்ருேர் கருத்திஞல் இந்த இருவரையுமே ஒன்ருகவும் கூறுவார்கள்.

இவ்வளவு பெருமையுடைய பிராட்டி எம்பெருமானுக்கு ஸ்வரூப நிரூபக தர்மமாக இருக்கிறுள். இந்தக் கருத்தைக் கொண்டு ஒரே சொல்லால் பிராட்டியும் கூறப்படுகிறுள்.

நாராயணன் - புருஷோத்தமன் முதலாக எம்பெருமானை மட்டும் குறிக்கும் சொல் ஒன்று கூறப்பட்டாலும் அந்தச் சொல்லிலேயே பிராட்டியும் ஸ்வரூபநிரூபக தர்மம் என்ற முறையில் அடங்கியுள்ளாள். ஆகவே இவளைத் தனியாக ஒரு சொல்லைக் கொண்டு குறிக்க வேண்டாம்.

இதைத் திருவுள்ளத்தில் கொண்டுதான் भட்டரும் ஸ்ரீகுணரத்ந கோஶத்தில் तदन्तर्भावात् त्वां न पृथगभिधत्ते श्रुतिरपि (ததந்தர்பாவாத் த்வாம் ந ப்ருதக் அபிதத்தே ஶ்ருதிரபி) எம்பெருமான் ஸ்வரூபத்தில் பிராட்டி அப்ருதக்ஸித்த தர்மமாய் அடங்கி இருப்பது காரணமாகப் பிராட்டியை ஶ்ருதி எம்பெருமானைக் குறிக்கும் சொல்லை மட்டும் கொண்டே கூறுவதன்றி இவளைத் தனியே ஒரு சொல் கொண்டு கூறுவதில்லை, என்று அருளியுள்ளார்.

இதே ஸமயத்தில் எம்பெருமானுக்குப் போலே இவளுக்கும் ஜ்ஞாநம், ஶக்தி முதலான குணங்கள் இருப்பது காரணமாக இவளைத் தனியாகவும் கூறுவதுண்டு.

ஆக இவ்வளவால் பிராட்டி பெருமாள் இருவர்க்கும் துல்யமான ஜகத் காரணத்வம் உண்டு என்று கூறப் பட்டதாகிறது.

மேலும் பிராட்டிக்கு ஜகத் காரணத்வம் உண்டு என்பதை லக்ஷ்மீ தந்த்ரம் என்ற ஶ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதையும் தெளிவாகக் காட்டுகிறது. அவற்றில் உள்ள சில ஶ்லோகங்களைப் பூர்வர்கள் காட்டியுள்ளனர். அவற்றை நாமிங்கு தருகிறோம்.

லக்ஷ்மீ தந்த்ரம் முழுவதுமே பிராட்டியின் ஜகத் காரணத்வம் முதலான பெருமைகளை விவரிக்கிறது. இதில் முதல் அத்யாயத்தில்

'एषैव सृजते काले सैषा पाति जगत्त्रयम् ।
जगत् संहरते चाऽन्ते तत्तत्कारणसंस्थिता ॥

(ஏஷைவ ஸ்ருஜதே காலே ஸைஷா பாதி ஜகத்த்ரயம் ।
ஜகத் ஸம்ஹரதே சாऽந்தே தத்தத்காரணஸம்ஸ்திதா ॥)

என்ற ஶ்லோகம் உள்ளது. இதன் பொருள் - அர்த்தம் அனைவருக்கும், ஏன் பிறர்க்கும் கூட எளிதில் புரியும்.

பிராட்டிதான் உரிய காலத்தில் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறாள். மூவுலகங்களையும் இவள் ரக்ஷிக்கிறாள். முடிவில் உலகத்தை ஸம்ஹரிக்கவும் செய்கிறாள் என்பது இதன் பொருள். இதில் உள்ள ஏவ (एव) காரம் ப்ரஸித்தியைக் காட்டுகிறது. ப்ரஹ்மத்திற்குக் காரணத்வம் இல்லை என்று கூறவில்லை.

இதற்கு அடுத்த ஶ்லோகத்தையும் கவனிக்க வேண்டும்.

एकधा च द्विधा चैव तैस्तैस्तत्त्वाब्धिपारगैः ।
व्यपदिश्यावहे शास्त्रे तावावां सर्वकारणम् ॥

(ஏகதா ச த்விதா சைவ தைஸ்தைஸ்தத்த்வாப்திபாரகை:।
வ்யபதிஶ்யாவஹே ஶாஸ்த்ரே தாவாவாம் ஸர்வகாரணம்)
என்பதே அந்த ஶ்லோகம்.

முன்பு காட்டிய அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வசநத்தின் அர்த்தத்தையேதான் இதுவும் வலியுறுத்திக் கூறுகிறது.

நமக்கு வேண்டிய ப்ரமாண க்ரந்தங்கள் ஸஞ்சாரத்தில் இருக்கும் நமக்கு அவ்வப்போது வேண்டிய அளவில் கிடைக்கவில்லை.

(யாரிடமிருந்தோ பெற்ற ஏதோ ஒரு க்ரந்தத்தில் இந்த ஶ்லோகம் அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் 8வது அத்யாயத்தில் இருப்பதாக ஒருவர் கையெழுத்தினுல் குறிப்பிட்டிருந்தார். அதைக் கொண்டு நாமும் இங்கு 611வது பக்கத்தில் அவ்வாறே குறிப்பிட்டுள்ளோம். தற்போது நல்ல நிலையில் உள்ள புஸ்தகம் கிடைத்தது. அதில் இந்த ஶ்லோகம் லக்ஷ்மீதந்த்ரத்தில் இருப்பதாக அச்சிடப்பட்டுள்ளது. அதைக் கண்டதும் இப்போது அப்படியே ஆகரத்தைக் குறிப்பிட்டுள்ளோம்.) இவ்வாறே முன்பு கிடைத்த ஶ்லோகத்தில் 'ஶ்ருத்யப்தி பாரகை:' (श्रुत्यब्धिपारगैः) என்ற பாடம் காணப்பட்டது. அதன்படி முன்பு அர்த்தம் எழுதப்பட்டது. இப்போது கிடைத்த புஸ்தகத்தில் 'தத்த்வாப்திபாரகை:' (तत्त्वाब्धिपारगैः) என்ற பாடம் கிடைத்துள்ளது. அதன்படிப் பொருள் காட்டியுள்ளோம். இந்தப் பதத்தின் மாற்றத்தினுல் ஸித்தாந்தத்தில் எவ்வித மாற்றம் ஏற்படாது. விஷயத்தை நிர்ணயம் செய்பவர்களுக்கு விஶேஷணமாய் அமைந்த பதமிது. முன் காட்டிய இடத்தின் 'வேதக் கடலின் கரை கண்டவர்கள் இவ்வாறு கூறினுர்கள்' என்பது பொருள். இங்குக் காட்டியுள்ள பாடத்தின்படி 'தத்த்வங்களாகிற கடலைக் கடந்தவர்கள்' என்பது பொருள்.

பிராட்டி அருளிச் செய்கிருள்.

நான் (பிராட்டி) எம்பெருமானுக்கு விசேஷணமாய் - ஸ்வரூபநிரூபகையாய் இருக்கிறேன். இது தவிர எம்பெருமானுக்குப் போலவே ஜ்ஞாநம் முதலாக எல்லா குணங்களையும் பெற்றிருக்கிறேன்.

எம்பெருமானுக்கு விசேஷணமாயிருக்கிறேன் என்ற காரணத்தினால் என்னையும் எம்பெருமானையும் ஒன்றாகவே அதாவது அவனைக் குறிக்கும் சொல்லாலேயே வழங்கு கின்றனர். எம்பெருமானும் நானும் ஒன்றாகவே கூறப்படுகிறோம். என்க்குள்ள சில விசேஷங்களை முன்னிட்டு என்னையும் எம்பெருமானையும் தனித் தனியான சொற்களைக் கொண்டு வெவ்வேறாகவும் எங்கள் இருவரையும் வழங்குகிறார்கள். இப்படி ஒன்றாகவும் வேறாகவும் கூறப் படுகிற நாங்கள் இருவருமே ஸர்வகாரணம் ஆகிறோம் என்றும் பிராட்டி அருளுகிறாள்.

இந்தக் கருத்தைத் தெரிவிக்கும் வாக்யம் 'तावावां सर्वकारणम्' (தாவாவாம் ஸர்வகாரணம்) என்பதேயாகும்.

तौ-आवां सर्वकारणम् (தௌ-ஆவாம் ஸர்வ காரணம்) என்று பதங்களைப் பிரிக்க வேண்டும்.

तौ-आवाम् (தௌ-ஆவாம்) அப்படிப்பட்ட நாங்கள் இருவரும் என்று அருளியிருப்பதைப் பிறர்களும் அவர்களைப் பின்பற்றுபவரும் கவனிக்க வேண்டும்.

அப்படிப்பட்ட தௌ என்ற விசேஷணத்தின் கருத்து என்ன? ஒன்றாகவும் (ஒரே சொல்லின் பொருளாகவும்) இருவராகவும் (இரண்டு சொற்களால் கூறப் படுபவர்களுமா யிருக்கும் நாங்கள்) என்றபடி. கடல் போல் விரிந்து கிடக்கும் தத்த்வங்களின் நிலைகளை உள்ளபடி அறிந்தவர்கள் இம்மாதிரி எங்களை ஒன்று படுத்தியும், தனித்தும் கூறுகிறார்கள் என்றதால் இந்தக் கருத்து பரம ப்ராமாணிகமானது என்பது தானாகவே விளங்கும். எம்பெருமானுக்கு ஸ்வரூப நிரூபக தர்மமாய் இருப்பதால் 'ஏகதா' (एकधा) ஒன்று படுத்தி வ்யவஹாரம், தனித் தனியாகவுள்ள சிறப்பியல்புகள் காரணத்தினால் 'த்விதா ச' (द्विधा च) வேறுபடுத்தி வ்யவஹாரம் வருகிறது என்றபடி.

பிராட்டி இரண்டு வகைப்பட்ட தன்மைகளைக் கொண்டவள். ஒன்று ஸ்வரூப நிரூபக தர்மபூதையாய் எம்பெருமான் ஸ்வரூபத்தில் அடங்கியிருக்கை. மற்றொன்று ஜ்ஞாந-ஶக்தி பல (बल) ஐஶ்வர்யாதிகளால் எம்பெருமானுக்கு ஸமமாக நிற்கும் நிலை. முந்தைய தன்மையைக் கொண்டு ஏகதா வ்யவஹாரம். இரண்டாவதான தன்மையைக் கொண்டு த்விதா வ்யவஹாரம் என்ற பாகுபாடு முதலில் பிறர்களால் அறியப்பட வேண்டும்.

இந்த ஶ்லோகத்தில் 'ஆவாம் ஸர்வகாரணம்' நாங்களிருவருமே ஸர்வ காரணம் என்றிருப்பதையும் கவனிக்க வேண்டும் பிறர்கள். ஸர்வ காரணம் என்பதற்கு 'ஸர்வேஷாம் காரணம்', 'ஸர்வம் ச தத் காரணம் ச' என்றும் விக்ரஹம் கொள்ளலாம். 'ஸர்வேஷாம் காரணம்' என்பதால் ஸர்வ சேதந-அசேதநங்களுக்கும் நாங்களிருவரும் காரணம் என்ற பொருள் கிடைக்கிறது.

'ஸர்வம் ச தத் காரணம் ச' என்ற விக்ரஹத்தால் நாங்களிருவரும் (உலகுக்கு) ஸர்வ காரணமாயும் இருக்கிறோம். அதாவது உபாதாந காரணம், நிமித்த காரணம் ஸஹகாரி காரணம், என்று கூறப்படும் ஸர்வவித காரணமாயும் இருக்கிறோம் என்ற பொருள் கிடைக்கிறது.

இந்த இரண்டு அர்த்தங்களுமே ஶாஸ்த்ரஜ்ஞர்களுக்கு அபிமதமானவையே.

முன்பு காட்டிய லக்ஷ்மீதந்த்ரம் ஐந்தாவது அத்யாயத்தில் உள்ள :-

'आविश्याऽहं अहङ्कारम्' (ஆவிஶ்யாऽஹம் அஹங்காரம்) - நான் (பிராட்டி) அஹங்கார தத்த்வத்திற்குள் ஆத்மாவாக அநுப்ரவேஶித்து ப்ரேரிக்கிறேன் என்பதால் பிராட்டிக்கு உபாதாந காரணத்வமும் கூறப்பட்டதாகிறது.

ஆகையால் பிராட்டிக்குக் கூறப்படும் காரணத்வத்தை கௌணமாகக் கொள்ளக் கூடாது. எம்பெருமானைப் போலவே பிராட்டிக்கும் ஸர்வ ஜகத்துக்கும் ஸர்வ ப்ரகார காரணத்வம் உண்டு என்பதே ஸ்ரீ பாஞ்சராத்ரஸித்தாந்தம்.

முன்பு காட்டிய லக்ஷ்மீதந்த்ரத்தில் பிராட்டி கூறியுள்ள 'एकधा च आवां व्यपदिश्यावहे' (ஏகதா ச ஆவாம் வ்யபதிஶ்யாவஹே) நாங்கள் இருவரும் அதாவது எம்பெருமானும் பிராட்டியுமாகிய இருவரும் ஒன்றாக - ஒரே சொல்லால் குறிக்கப்படுகிறோம். 'एको ह वै नारायण आसीत्; सदेव सौम्येदमग्र आसीत्' (ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்; ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத்) என்றிவை முதலான வாக்யங்கள்) இதற்கு உதாஹரணங்கள் ஆகின்றன. 'आनीदवातं स्वधया तदेकम्, (ஆநீத் அவாதம் ஸ்வதயா ததேகம்) முதலான வாக்யங்கள் 'द्विधा च व्यपदिश्यावहे' (த்விதா ச வ்யபதிஶ்யாவஹே) என்பதற்கு உதாஹரணம்.

சதுஶ்ஶ்லோகீ ஸ்தோத்ரத்தில் இரண்டாவது ஶ்லோக வ்யாக்யாந பாஷ்யத்தில் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ஸ்வதா ஶப்தத்திற்கு வேறுவிதமாகப் பொருள் கூறியிருப்பது இதற்கு விருத்தமானது என்று பிறர் சொல்லும் ஆக்ஷேபம் அந்த ஸந்தர்பத்தைச் சரியாக அறிந்து கொள்ளாமையால், அறிந்து கொள்ள முடியாமையால் ஏற்பட்டதாகும்.

மேலும் 'அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ - ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம்' என்ற உபநிஷத் வாக்யங்கள் பிராட்டியைத் தனிச் சொல்லால் எடுத்துக் கூறி அவளுக்கு ஜகதீஶ்வரத்வம் கூறுகிறது. இவ்வாறே 'ईशानो भूतभव्यस्य' 'ஈஶாநோ பூதபவ்யஸ்ய' என்ற உபநிஷத் வாக்யம் எம்பெருமானைத் தனிச் சொல்லால் எடுத்துக் கூறி அவனுக்கு ஜகதீஶ்வரத்வம் கூறுகிறது.

ஜகதீஸ்வரத்வம் இருக்குமிடத்தில் ஜகத் காரணத்வமும் கட்டாயம் இருக்க வேண்டும். இப்படித் தனித் தனியாகச் சொல்வதெல்லாம் (த்விதா வ்யபதிஸ்யாவஹே) என்பதற்கு ப்ரமாணங்கள் ஆகின்றன. ஸ்ரீ பாஞ்சராத்ரத்திலும் கீழே காட்டிய முறையில் எம்பெருமானையும் பிராட்டியையும் தனித் தனிச் சொற்களால் குறித்தும், ஒரு சொல் கொண்டு குறித்தும் இவ்விருவர்களுக்கும் ஜகத்காரணத்வம் கூறப்பட்டுள்ளதைப் பார்க்கலாம்.

லக்ஷ்மீதந்த்ரத்தில் மேலும் பற்பல ஸ்லோகங்களில் பிராட்டி ஜகத் காரணம் என்பது நன்கு விளக்கப்பட்டுள்ளது.

கடைசியாக இருபத்து எட்டாவது அத்யாயத்தில் கூறப்படுகிறது:

'लक्ष्म्या सह हृषीकेशः देव्या कारुण्यरूपया ।

रक्षकस्सर्वसिद्धान्ते वेदान्तेषु च गीयते ॥"

லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேஶ: தேவ்யா காருண்யரூபயா ।
ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேஷு ச கீயதே ॥ என்று.

'கருணையின் வடிவாகக் கூறப்படும் தேவியான லக்ஷ்மீ என்ற பெரிய பிராட்டியாருடனே கூடியிருந்து ஹ்ருஷீகேஶனை எம்பெருமான் ஜகத்தை ரக்ஷிக்கிறான்' என்றே ஸர்வ ஸித்தாந்தங்களிலும் வேதாந்தங்களிலும் சொல்லப்படுகிறான் என்கிறது இந்த ஸ்லோகம்.

இந்த ஸ்லோகத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பிறர் தம் மனம் போன போக்கில் அர்த்தம் சொல்லுகிறார்கள்.

இதற்கு முன்பு உள்ள ஸ்லோகங்களையும் எடுத்துக் கொண்டு அவற்றுடன் இந்த ஸ்லோகத்தையும் சேர்த்துப் பார்த்து அர்த்தம் சொன்னால்தான் தத்த்வம் புலனாகும்.

இதற்கு முன் உள்ள ஸ்லோகங்கள் பலவற்றை இங்கு எடுத்துக் காட்டியுள்ளோம். அவற்றில் 'பிராட்டி ஸர்வஜகத்துக்கும் முக்யமான காரணமாக இருப்பவளே' என்பது கூறப்பட்டுள்ளது. அவை கூறிய அர்த்தத்தைத்தான் இந்த ஸ்லோகம் அநுவாதம் செய்து இதுவே ஸர்வ ஶாஸ்த்ரங்களிலும், உபநிஷத்துகளிலும் கூறப்பட்டுள்ளது என்கிறது.

ஶாஸ்த்ரம் தெரிந்தவர்களும் நடுவே கிடக்கும் ஒரு ஶ்லோகத்தை மட்டும் பார்த்து விட்டு அர்த்தம் சொல்லக் கூடாது. இந்த ஶ்லோகத்துக்கு முன்னும் பின்னும் உள்ள ஶ்லோகங்களைக் கொண்டுதான் பொருள் கொள்ள வேண்டும். இல்லாவிடில் வேறான அர்த்த ஜ்ஞாநத்தைத்தான் தரும் எடுத்துக் கொண்ட ஶ்லோகம் அல்லது வாக்யம் என்பதை

पूर्वापरापरामृष्टः शब्दोऽन्यां कुरुते मतिम् (பூர்வாபராபராம்ருஷ்ட: ஶப்தோ஽ந்யாம் குருதே மதிம்) என்ற ப்ரமாணம் தெரிவிக்கிறது.

ஆகவே 'लक्ष्म्या सह हृषीकेशः' (லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேஶ:) என்ற ஶ்லோகம் இதற்கு முன்னுள்ள ஶ்லோகங்களால் கூறப்பட்ட அர்த்தத்தைச் சுருக்கிக் கூறுகிறது. முன் ஶ்லோகங்களில் பிராட்டிக்கு ஜகத் காரணத்வம் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ளது. அதைத்தான் இந்த ஶ்லோகம் கூறுகிறது. 'ஹ்ருஷீகேஶ: லக்ஷ்ம்யா ஸஹ ரக்ஷக:' 'ஹ்ருஷீகேஶன் லக்ஷ்மியுடன் கூட ஜகத்தை ரக்ஷிக்கிறான்' என்ற அர்த்தம் நாம் சொல்வதாகும். பிறர்கள் லக்ஷ்மியுடனிருக்கும் ஹ்ருஷீகேஶன் ஜகத் ரக்ஷகன் என்று கூறுகின்றனர். இவ்விரண்டினுள் இந்த ஶ்லோகம் எந்த அர்த்தத்தைக் கூறுகிறது என்பதில் இதற்கு முந்தைய ஶ்லோகங்கள்தான் ப்ரமாணங்கள் ஆகின்றன.

மேலும் பிராட்டிக்கு ஜகத்காரணத்வம் உண்டு என்பதற்கு பல ப்ரமாணங்கள் உள்ளன. இவற்றுள் ஸ்ரீ வ்யாஸ பகவான் அருளிய மஹாபாரதத்தில் ஶாந்தி பர்வாவில் மோக்ஷ தர்மபர்வாவில் உள்ள பல ஶ்லோகங்கள் ப்ரபல ப்ரமாணங்கள் ஆகின்றன. அவற்றுள் ஒரு ஶ்லோகத்தை மட்டும் இங்குக் காட்டுகிறோம்.

'विद्या सहायवान् देवः विष्वक्सेनो हरिः प्रभुः ।
आदिकर्ता स देवानां अप्रमेयो जनार्दनः ॥'

வித்யா ஸஹாயவாந் தேவ: விஷ்வக்ஸேநோ ஹரி: ப்ரபு: ।
ஆதிகர்த்தா ஸ தேவாநாம் அப்ரமேயோ ஜநார்த்தந: ॥

இது ஸுப்ரஸித்தமான ஶ்லோகம்.

இங்கு உள்ள 'வித்யா' என்ற ஶப்தம் லக்ஷ்மியைக் குறிக்கிறது. ப்ரபுவான விஷ்வக்ஸேநர் என்ற ஹரியானவர் வித்யா - என்கிற லக்ஷ்மியை ஸஹாயமாக உடையவராய் உலகுக்கெல்லாம்' ஆதி கர்த்தாவாகிறுர். இவரே ஜநார்த்தநன் ஆவார். இவனுடைய பெருமை அளவிடமுடியாது என்பது இதன் பொருள்.

இங்குள்ள வித்யா ஶப்தம் லக்ஷ்மியைக் குறிக்கிறது. ஹரிவம்ஶத்தில் எம்பெருமானுக்கே உரியதான மாதவன் என்ற ஶப்தத்திற்கு ருத்ரபகவான் விளக்கம் தந்து க்ருஷ்ணனை நோக்கிக் கூறுகிறுன்.

'ஹே க்ருஷ்ண! உனக்கு ஏன் மாதவன் என்ற பெயர் வந்தது தெரியுமா! நான் கூறுகிறேன். 'மா-தவன்' என்று இரண்டு பதங்கள் உள்ளன 'மாதவன்' என்ற பெயரில். இதில் 'மா' என்ற சொல் வித்யை என்பவளைக் குறிக்கிறது. அந்த வித்யைக்கு நீ ஈஶனுகை இருக்கிறுய். धवः (தவ:) என்ற சொல் ஸ்வாமியைக் குறிக்கிறது. ஆக மாதவ: = வித்யாபதி: மாதவ: என்ற பெயரைப் பெற்றுள்ளாய்' என்கிறுன் ருத்ரன்.

'மா' என்ற ஶப்தம் லக்ஷ்மியைக் குறிக்கிறது என்பது ப்ரஸித்தம். இதற்கு வ்யாக்யாநம் செய்யும்போது 'மா' என்ற ஶப்தத்தின் ஸ்தாநத்தில் - இடத்தில் 'வித்யா' என்று வழங்கப்பட்ட சொல் லக்ஷ்மியையே குறிப்பதாகும்.

பாத்மபுராணத்தில் 'लक्ष्मीः, श्रीः, कमला, विद्या, मा च विष्णुप्रिया, सती' (லக்ஷ்மீ:, ஶ்ரீ:, கமலா, வித்யா, மா ச விஷ்ணு ப்ரியா, ஸதீ) என்று பிராட்டியின் பெயர்களின் நடுவில் வித்யாஶப்தமும் கூறப்பட்டிருப்பதால் 'வித்யா' என்ற சொல் லக்ஷ்மியைக் குறிப்பதாகும்.

ஆக வித்யா ஶப்தத்திஞல் கூறப்பட்ட லக்ஷ்மியின் ஸஹாயத்தை உடையவனும் எம்பெருமான் ஆதி கர்த்தாவாகிறுன். எம்பெருமான் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும்போது லக்ஷ்மியின் ஸஹாயத்தைப் பெற்றிருக்கிறுன். லக்ஷ்மியின் ஸஹாயத்தைப் பெற்றவனுய்க் கொண்டே எம்பெருமான் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறுன்.

ஸஹாய ஶப்தத்தின் பொருளேயும் பூர்வர்கள் விவரித்துள்ளனர்.

**सह अयते - एतीति वा गच्छतीति वा सहायः । ஸஹ அயதே ஏதேதி வா கச்சதீதி வா ஸஹாய:।**

**विद्या - लक्ष्मीः सहायः** *पत्या सह* **सृष्टिस्थिति लयादि कार्येषु अयते एतीति वा-गच्छतीति सहायः 'विद्या चाऽसौ सहायश्च' इति कर्मधारयः, तद्वान् - 'नित्ययोगे मतुप्'** என்று.

*முதலில் ஸஹாய: என்ற சொல்லின் பொருளே அறிவோம். ஸஹ - தன்னுடைய பதியான எம்பெருமானுடன் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் முதலான கார்யங்களில், அயதே ஏதீதி வா கச்சதீதி செல்லுகிறாள் - அந்வயிக்கிறாள். ஆக எம்பெருமான் ஜகத்தை உண்டு பண்ணும்போதும், நிலே பெறுத்தும் போதும், ஸம்ஹாரிக்கும்போதும் கூடவே இருந்து துணே புரிபவள் வித்யை என்கிற லக்ஷ்மீ. ஆக லக்ஷ்மீ ஸஹாயமாகிறாள். இப்படி லக்ஷ்மியாகிற ஸஹாயத்தை - துணே புரிபவரை என்றும் உடையவன் என்று 'வித்யா ஸஹாயவாந்' என்பதன் பொருள் என்று விளக்கமும் தந்துள்ளனர் பூர்வர்கள்.*

*இதனால் எம்பெருமானுடைய ஜகத் கர்த்ருத்வத்தில் - அதாவது எம்பெருமான் செய்யும் ஜகத் ஸ்ருஷ்டி முதலான கார்யங்களில் பிராட்டியும் உடனிருந்து செயல்படுகிறாள் - செய்கிறாள் என்பது ஸ்பஷ்டமாகத் தெரிய வருகிறது. உலகில் ஸஹாய ஶப்தம் உதவி என்ற பொருளில் வழங்கப்படும். இங்கு உதவி செய்பவரைக் குறிக்கிறது. உதவி செய்கிற பிராட்டியை உடையவன் என்ற பொருள் கிடைக்கிறது.*

*மேலும் பாரதத்தில் மோக்ஷபர்வாவில்-*

**एकाकी विद्यया सार्धं विहरिष्ये जगत् पुनः ।**
**ततो भूयो जगत्सर्गं करिष्यामीह विद्यया ॥**
**ஏகாகீ வித்யயா ஸார்த்தம் விஹரிஷ்யே ஜகத் புந:।**
**ததோ பூயோ ஜகத்ஸர்க்கம் கரிஷ்யாமீஹ வித்யயா॥**

*எம்பெருமான் வித்யையோடு -- அதாவது லக்ஷ்மியோடு கூடி ஒருவனுக இருந்து மீண்டும் இந்த ஜகத்தைக் கொண்டு விளையாடப் போகிறேன் என்று எம்பெருமான் அருள்வதாக இந்த ஶ்லோகம் கூறுகிறது. இங்கு உள்ள வித்யா ஶப்தம்*

லக்ஷ்மியைக் குறிக்கிறது. 'வித்யா' என்ற ஶப்தமானது ப்ரக்ருதியையும் பிராட்டியையும் குறிக்கிற சொல்லாகும். இவ்விடத்தில் பிராட்டியைக் குறிக்கிறது.

ஆக வித்யையுடன் நான் கூடியிருந்து ஒருவனாகவே விளையாடுவேனாக. இந்த வித்யை என்கிற பிராட்டியைக் கொண்டே ஜகத்தை மீண்டும் ஸ்ருஷ்டிப்பேனாக என்று எம்பெருமான் அருளுவதாகக் கூறுகிறது இந்த ஶ்லோகம்.

இதில் உள்ள விஶேஷத்தையும் பிறர் நன்கு அறிய வேண்டும். அதாவது 'வித்யயா ஸார்தம் ஏகாகீ' பிராட்டியுடன் கூடியிருந்தும் ஒருவனாகவே இருக்கும் நான் என்கிறான் எம்பெருமான். பிராட்டியுடன் கூடியிருப்பதால் நாங்கள் இருவர் ஆகமாட்டோம். அவளுடன் கூடியிருத்தல் அத்வைதத்திற்கு - ஒருமைக்கு முரணாகாது என்று கூறுகிறபடி.

'ஆநீத் அவாதம் ஸ்வதயா ததேகம்' என்ற இடத்திலும் இந்த முறைதான் கையாளப்படுகிறது. 'ஸ்வதயா ஸஹிதமபி ஏகமேவ ஆநீத் ஆஸீத்' என்றுதானே அங்கும் பொருள்.

எம்பெருமானைப் போலே ஸ்வதந்த்ரமான மற்றொரு பொருளை ஒப்புக் கொண்டால்தான் அத்வைதம் போகுமே தவிர, அவனுக்கு அப்ருதக்ஸித்தவிஶேஷணங்களாக எத்தனை பொருள்களை ஒப்புக் கொண்டாலும் அத்வைதம் போகவே போகாது. இதைப் பிறர்கள் மநத்தில் கொள்ளவேண்டும் என்பது இதனால் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

பிராட்டியை ஶக்தி ஶப்தத்தினாலும் பல ப்ரமாணங்கள் கூறுகின்றன. அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் :-

षाड्गुण्यं तत् परं ब्रह्म स्वशक्तिपरिबृंहितम् ।
बहु स्यामिति सङ्कल्पं भजते.... ॥

என்று உள்ள ஒரு ஶ்லோகம் பிராட்டியுடன் கூடித்தான் எம்பெருமான் உலகத்தை ஸ்ருஷ்டிப்பதற்கு முன் 'பலவாக ஆகக் கடவேன்' என்று ஸங்கல்பித்துக் கொள்ளுகிறான் என்று கூறுகிறது.

ஶ்ரீ ந்ருஸிம்ஹதாபநீயோபநிஷத்தில் 'माया वा एषा नारसिंही, सर्वमिदं सृजति, सर्वमिदं रक्षति, सर्वमिदं संहरति' (மாயா

வா ஏஷா நாரஸிம்ஹீ ஸர்வமிதம் ஸ்ருஜதி, ஸர்வமிதம் ரக்ஷதி, ஸர்வமிதம் ஸம்ஹரதி) என்று இருப்பதையும் இங்குப் பிறர்கள் கவனிக்க வேண்டும்.

இங்கு உள்ள 'மாயா' ஶப்தம் பிராட்டியை - லக்ஷ்மியைக் குறிப்பது என்பது மேலே நன்கு விவரிக்கப்பட்டுள்ளது.

'ஏதாம் மாயாம் ஶக்திம் வேத' என்று அடுத்த வாக்யத்திலேயே மாயைதான் ஶக்தியாகும் என்று கூறிவிட்டு மேலே श्रियं लक्ष्मीं ... तां वियां ब्रह्मयोनिं सरूपां तामिहाऽऽयुषे शरणं प्रपद्ये । (ஶ்ரியம் லக்ஷ்மீம் ... தாம் வித்யாம் ப்ரஹ்மயோநிம் ஸரூபாம் தாமிஹாऽऽயுஷே ஶரணம் ப்ரபத்யே ।) என்று கூறப்பட்டுள்ளது. இங்கு ஆதிஶங்கரர் தாமியற்றிய பாஷ்யத்தில் 'வித்யாம் ஈஶ்வர ஶக்திம் ப்ரஹ்மயோநிம் ப்ரஹ்மாவாப்த்யை காரணபூதாம், ஸரூபாம், ஸாகாராம்' என்று வ்யாக்யாநம் செய்துள்ளார்.

'ஶக்தி' என்றதும் எம்பெருமானுடைய ஸாமர்த்யம் என்ற உருவமற்ற குணம்தான் நினைவுக்கு வரும். அது அன்று என்பதற்காக ஸரூபாம் - உருவம் உள்ளது என்கிறது உபநிஷத்.

ப்ரஹ்மயோநிம் - ப்ரஹ்மாவாப்த்யையை காரணபூதாம் என்ற ஶங்கரருடைய வாக்யத்தை ரஸிக்க வேண்டும். ப்ரஹ்ம ப்ராப்திக்குக் காரணமாய் - உபாயமாயிருப்பவள் பிராட்டி என்ற கருத்தைக் காட்டுகிறார் ஶங்கரர் இதில்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹதாபநீய உபநஷத்தின் வாக்யமான இதில் மாயா என்றும் ஶக்தி என்றும் கூறப்படுபவள் லக்ஷ்மீதான் என்பதை ஆரம்பவாக்யம் தெரிவிக்கிறது.

இப்படிப்பட்ட நரஸிம்ஹனுடைய மாயைதான் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறது, ரக்ஷிக்கிறது, ஸம்ஹரிக்கிறது என்று பிராட்டிக்கு ஸர்வஜகத்காரணத்வம் உண்டு என்பதை இந்த உபநிஷத் வாக்யம் ஸ்பஷ்டமாகக் காட்டுகிறது.

இந்த இடத்தில் ஆதிஶங்கரர் தம்முடைய பாஷ்யத்தில் शुद्धस्य ब्रह्मणः अकारणत्वात् (ஶுத்தஸ்ய ப்ரஹ்மண: அகாரணத்வாத்) என்று கூறியுள்ளார். ஆகப் பிராட்டி இன்றி எம்பெருமானுக்கு ஜகத் காரணத்வமே கிடையாது -

ஸம்பவிக்காது என்று காட்டியுள்ளார் ஆதிஶங்கரர். ஆக இவ்வளவால் பிராட்டிக்கு ஜகத்காரணத்வம் உண்டு என்பதில் ஸ்ரீ ந்ருஸிம்ஹதாபநீய உபநிஷத்தும் ப்ரமாணமாகிறது.

இவ்வளவு ப்ரமாணங்களையும் முதலில் அறிந்த பிறகு 'லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேஶ: தேவ்யா காருண்யரூபயா ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேஷு ச கீயதே' என்ற ஶ்லோகத்தை அறிய முற்பட வேண்டும். அப்போதுதான் இதன் முழு அர்த்தம் ப்ராமாணிகர்களுக்கு மநத்தில் படும்.

விஷ்ணுதர்மத்திலும் இந்த ஶ்லோகத்தின் அர்த்தத்தை நன்கு விளக்கிக் கூறுகிறது ஒரு ஶ்லோகத்தின் ஒரு பாதி - அதாவது:-

'लक्ष्मीसहायो लोकांस्तु सर्वान् पालयते सदा' என்பதேயாகும்.

முன் காட்டிய லக்ஷ்மீதந்த்ர ஶ்லோகம். 'ஹ்ருஷீகேஶ: லக்ஷ்ம்யா ஸஹ ரக்ஷக: பவதி' என்று பிராட்டியுடன் கூட இருந்து ரக்ஷகன் ஆகிறான் என்கிறது. தற்போது காட்டிய விஷ்ணுதர்ம ஶ்லோகத்தின் பாதி, உதவி புரியும் லக்ஷ்மியை உடையவனாய் உலகங்களை ரக்ஷிக்கிறான் எம்பெருமான் என்று பிராட்டியை - ஸஹாயபூதையாக - உதவுகின்றவளாகக் கூறுகிறது. இதனால் பிராட்டியின் ஜகத்காரணத்வம் ஸ்பஷ்டம்.

இவ்விஷயங்கள் அனைத்தும் ஸ்ரீமத் பரகால மடாதிபஸ்வரராய், ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவ ஸாக்ஷாத்காரம் பெற்றவராய் எழுந்தருளியிருந்த ஸர்வ ஶாஸ்த்ர பாரங்கதரான ஸ்ரீமத் அபிநவ ப்ரஹ்மதந்த்ர ரங்கநாத யதீந்த்ர மஹாதேஶிகன் அருளிய ஹயக்ரீவ உபாக்யாந வ்யாக்யாநத்தில் ஸ்பஷ்டமாகப் பற்பல ப்ரமாணங்களுடன் காட்டப்பட்டுள்ளது.

ஆக இவ்வளவால் எம்பெருமானைப்போலவே பிராட்டிக்கும் முக்யமான ஜகத்காரணத்வம் உண்டு என்று கூறப்பட்டதாகிறது.

### பிராட்டியும் ப்ரஹ்மமே.

இதற்கு மேலும் சில விசாரங்கள் :-

பிராட்டியும் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறாள், ரக்ஷிக்கிறாள், ஸம்ஹரிக்கிறாள் என்றால் பிராட்டியையும் ப்ரஹ்மம் என்றே கூற வேண்டி வருமே! 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே;

யேந ஜாதாநி ஜீவந்தி யத் ப்ரயந்த்யபிஸம்விஶந்தி' என்ற உபநிஷத் வாக்யத்தில் எதனிடமிருந்து உலகம் உண்டாகிறதோ, யாரால் ஜீவிக்கிறதோ, யாரிடத்தில் லயத்தை அடைகிறதோ அது ப்ரஹ்மம் என்றுதானே ப்ரஹ்மத்திற்கு லக்ஷணம் கூறப்பட்டுள்ளது.

ஜகத்தினுடைய ஜந்ம-ஸ்திதி-லய ஹேதுவாயிருப்பது ப்ரஹ்மம் என்றுதானே ப்ரஹ்மத்திற்கு லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இந்த லக்ஷணம் இப்போது காட்டிய ப்ரமாணங்களால் பிராட்டிக்கும் இருக்கிறதே! ஆகையால் அவளும் ப்ரஹ்மம் ஆகலாமே! என்ற கேள்வி இங்கு இதற்கு மேல் எழுகிறது. இதற்கு இஷ்டாபத்தி தான் பதில். அதாவது ஆம் - பிராட்டியும் ப்ரஹ்மம்தான், அவளுக்கும் ப்ரஹ்மத்வம் ப்ரஹ்மமாயிருக்கும் தன்மை நமக்கு அபிமதமே என்று இசைவதுதான் பதில்.

பிராட்டிக்கும் ப்ரஹ்மத்வம் உண்டு என்பதில் பல ப்ரமாணங்கள் உள்ளன. '**राडसि बृहती श्रीरसि**' (ராடஸிப்ருஹதீ ஸ்ரீரஸி) என்ற ஶ்ருதி பிராட்டியை நோக்கி 'ப்ருஹதீ அஸி, - மிகப் பெரியவளாய் - ப்ரஹ்மமாய் இருக்கிறாய்' என்று கூறுவதால் பிராட்டிக்கும் ப்ரஹ்மத்வம் உண்டு என்பது தெளிவாகக் கிடைக்கிறது இந்த ஶ்ருதியினால்.

**देशात् कालात् स्वरूपाच्च परिच्छेदो न मे स्मृतः।**

(தேஶாத் காலாத் ஸ்வரூபாச்ச பரிச்சேதோ ந மே ஸ்ம்ருத:।) என்ற லக்ஷ்மீதந்த்ரவசநம் தனக்கு (பிராட்டிக்கு) தேஶத்தினாலும் காலத்தினாலும் ஸ்வரூபத்தினாலும் பரிச்சேதம் கிடையாது. அதாவது இந்த தேஶத்தில் இருப்பாள், மற்றோர் தேஶத்தில் இருக்கமாட்டாள் என்று தேஶபரிச்சேதம் கிடையாது. எல்லா தேஶங்களிலும் இடங்களிலும் பிராட்டி இருப்பாள் என்று சொல்லப்பட்டுள்ளது. இதனால் விபுத்வம் - எங்குமிருக்கும் தன்மை கூறப்பட்டதாகிறது.

இவ்வாறே இந்தக் காலத்தில்தான் பிராட்டி இருப்பாள் - இந்தக் காலத்தில் இருக்கமாட்டாள் என்ற கால பரிச்சேதமும் கிடையாது. எல்லாக் காலத்திலும் பிராட்டி இருப்பாள் என்று சொல்லப்பட்டுள்ளது. இதனால் நித்யத்வம் கூறப் பட்டதாகிறது.

வஸ்துபரிச்சேதமும் பிராட்டிக்குக் கிடையாது. வஸ்து பரிச்சேதமாவது - இந்த ஒரு வஸ்து இந்த வஸ்துவாகத்தானிருக்கும். இந்த வஸ்து மற்றோர் வஸ்துவாக இருக்க முடியாதிருக்கையேயாகும்.

ஒரு கடத்தை (குடத்தை) எடுத்துக் கொள்வோம். அது கடமாகத்தான் இருக்குமே அன்றி படமாக (வஸ்த்ரமாக) இருக்காது. இவ்வாறே தேவதத்தன் என்ற ஒருவனை எடுத்துக் கொள்வோம். இவன் தேவதத்தனுகத்தானிருப்பானேயன்றி யஜ்ஞதத்தன் என்ற மற்றொருவனுக இருக்கமாட்டான், இருக்கவும் முடியாது.

எம்பெருமான் அப்படியல்லன். அவன் கடமாகவும் இருப்பான், படமாகவும் இருப்பான், அவன் தேவதத்தனுகவும் இருப்பான், யஜ்ஞ தத்தனுகவும் இருப்பான். என்ன காரணம் தெரியுமா? சேதநங்கள் அசேதநங்கள் அனைத்துக்கும் இவன் ஆத்மாவாக இருப்பதுதான். சேதநங்கள், அசேதநங்கள் அனைத்தும் இவனுக்கு - எம்பெருமானுக்கு ஶரீரமாக இருப்பதால், எல்லாவற்றுக்கும் இந்த எம்பெருமான் ஆத்மாவாக இருப்பதால் எல்லாமே இவன், सर्वं खल्विदं ब्रह्म (ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம) என்று சொல்லப்படுகிறது. இவ்வாறே பிராட்டியும் சேதநங்கள், அசேதநங்கள் அனைத்துக்கும் ஆத்மாவாக இருக்கிறாள்.

எம்பெருமான் பிராட்டியையும் உட்படுத்தி அனைத்துச் சேதநங்களுக்கும் அசேதநங்களுக்கும் ஆத்மாவாக இருக்கிறான். பிராட்டி எம்பெருமானைத் தவிர்த்து மற்றைய சேதநங்களுக்கும் அசேதநங்களுக்கும் ஆத்மாவாக இருக்கிறாள் என்ற பேதம் - வ்யத்யாஸம் அறியத்தக்கது. பிராட்டி எல்லாப் பொருள்களுக்கும் ஆத்மாவாக இருக்கிறாள் என்பதைப் பிராட்டியே अन्तस्स्थिताऽहं सर्वेषां भावानामिति निश्चयात् (அந்தஃஸ்திதாऽஹம் ஸர்வேஷாம் பாவாநாமிதி நிஶ்சயாத்) என்று அருள்வதாக லக்ஷ்மீதந்த்ரம் கூறுகிறது.

எம்பெருமானும் "இவ்வாறே தானும் பிராட்டியுமாகிற இருவருமே ஸர்வவஸ்துக்களுக்கும் ஆத்மாவாக இருக்கிறோம்

வஸ்துபரிச்சேதமும் பிராட்டிக்குக் கிடையாது. வஸ்து பரிச்சேதமாவது - இந்த ஒரு வஸ்து இந்த வஸ்துவாகத்தானிருக்கும். இந்த வஸ்து மற்றோர் வஸ்துவாக இருக்க முடியாதிருக்கையேயாகும்.

ஒரு கடத்தை (குடத்தை) எடுத்துக் கொள்வோம். அது கடமாகத்தான் இருக்குமே அன்றி படமாக (வஸ்த்ரமாக) இருக்காது. இவ்வாறே தேவதத்தன் என்ற ஒருவனை எடுத்துக் கொள்வோம். இவன் தேவதத்தனுகத்தானிருப்பானேயன்றி யஜ்ஞதத்தன் என்ற மற்றொருவனுக இருக்கமாட்டான், இருக்கவும் முடியாது.

எம்பெருமான் அப்படியல்லன், அவன் கடமாகவும் இருப்பான், படமாகவும் இருப்பான், அவன் தேவதத்தனுகவும் இருப்பான், யஜ்ஞ தத்தனுகவும் இருப்பான். என்ன காரணம் தெரியுமா? சேதநங்கள் அசேதநங்கள் அனைத்துக்கும் இவன் ஆத்மாவாக இருப்பதுதான். சேதநங்கள், அசேதநங்கள் அனைத்தும் இவனுக்கு - எம்பெருமானுக்கு ஶரீரமாக இருப்பதால், எல்லாவற்றுக்கும் இந்த எம்பெருமான் ஆத்மாவாக இருப்பதால் எல்லாமே இவன், सर्वं खल्विदं ब्रह्म (ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம) என்று சொல்லப்படுகிறது. இவ்வாறே பிராட்டியும் சேதநங்கள், அசேதநங்கள் அனைத்துக்கும் ஆத்மாவாக இருக்கிறுள்.

எம்பெருமான் பிராட்டியையும் உட்படுத்தி அனைத்துச் சேதநங்களுக்கும் அசேதநங்களுக்கும் ஆத்மாவாக இருக்கிறுன். பிராட்டி எம்பெருமானைத் தவிர்த்து மற்றைய சேதநங்களுக்கும் அசேதநங்களுக்கும் ஆத்மாவாக இருக்கிறுள் என்ற பேதம் - வ்யத்யாஸம் அறியத்தக்கது. பிராட்டி எல்லாப் பொருள்களுக்கும் ஆத்மாவாக இருக்கிறுள் என்பதைப் பிராட்டியே अन्तस्स्थिताऽहं सर्वेषां भावानामिति निश्चयात् (அந்த: ஸ்திதாऽஹம் ஸர்வேஷாம் பாவாநாமிதி நிஶ்சயாத்) என்று அருள்வதாக லக்ஷ்மீதந்த்ரம் கூறுகிறது.

எம்பெருமானும் "இவ்வாறே தானும் பிராட்டியுமாகிற இருவருமே ஸர்வவஸ்துக்களுக்கும் ஆத்மாவாக இருக்கிறேம்

என்பதை अस्याः मम च शेषं हि विभूतिरुभयात्मिका (அஸ்யா: மம ச ஶேஷம் ஹி விபூதி: உபயாத்மிகா) என்ற வசநத்தினால் வெளியிடுகிறான்.

இந்த விபூதியானது - அதாவது எனக்கு உடைமையாக - சொத்தாக இருக்கும் உலகங்கள் அனைத்தும் எனக்கும் இவளுக்கும் - அதாவது என்னுடைய பத்நியான பிராட்டிக்கும் ஶேஷமாக இருக்கிறது. எங்கள் இருவருக்கும் உபகாரம் செய்வதற்காக - பயன்படுவதற்காக உள்ளது என்கிறான் எம்பெருமான். இவ்விடத்தில் தனக்குச் சொத்தான விபூதியை उभयात्मकं என்று கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். 'उभौ-आत्मानौ यस्याः सा उभयात्मिका' (உபௌ-ஆத்மாநௌ யஸ்யா: ஸா உபயாத்மிகா) என்ற விக்ரஹத்தினால் இந்த விபூதிக்கு - சொத்தான உலகுக்கு எம்பெருமான் பிராட்டியாகிய இருவருமே ஆத்மாவாக இருக்கிறார்கள் என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

ஆகப் பிராட்டியும் எல்லாவற்றுக்கும் ஆத்மாவாக இருப்பதனால் எல்லாவற்றையும் பிராட்டியுடன் ஸமாநாதிகரணமாக सर्वमिदं श्रीः (ஸர்வமிதம் ஶ்ரீ:) என்று சொல்லுவதும் ஶாஸ்த்ர ஸம்மதமானதேயாகும்.

பிராட்டி தன்னுடைய ஸ்வரூபத்தினாலேயே உலகம் முழுவதும் வ்யாபித்திருக்கிறாள். தர்மபூத ஜ்ஞாநத்தினால்தான் வ்யாபித்திருக்கிறாள் என்பதில்லை என்ற விஷயத்தை அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை, லக்ஷ்மீ தந்த்ரம், விஷ்வக்ஸேந - ஸம்ஹிதை, ஶ்ரீமத்பாகவதம் முதலானவை கூறுகின்றன. உதாஹரணத்திற்குச் சில ஶ்லோகங்கள் :-

स्वातन्त्र्येण स्वरूपेण विष्णुपत्नीयमद्भुता ।
यतो जगद्भविष्यन्ती कचिदुन्मेषमृच्छति ॥ (अहिर्बुध्न्यसंहिता)

भगवद्यज्ञसंयोगात् पत्नी भगवतोह्यहम् ।
निरुपाधिस्वतन्त्रा च स्वामिनी वः कृपानिधिः ॥ (लक्ष्मीतन्त्रम्)

तथा लक्ष्म्याः स्वरूपं च शृणु वक्ष्ये समाहितः ।
गुणतश्च स्वरूपेण व्याप्तिस्साधारणी मता ॥ (विष्वक्सेनसंहिता)

यथा मया जगद् व्याप्तं *स्वरूपेण स्वभावतः ।*
तया व्याप्तमिदं सर्वं नियन्त्री च तथेश्वरी ॥

मया व्याप्ता तथा साऽपि तया व्याप्तोऽहमीश्वरः ॥

मम तस्याश्च सेनेश! वैलक्षण्यमिदं शृणु ॥
मच्छेषभूता सर्वेषामीश्वरी वल्लभा मम ॥

तस्याश्च जगतश्चाहमीश्वरो वेदविश्रुतः ॥
अस्या मम च शेषं हि विभूतिरुभयात्मिका ॥
इति श्रुतिशिरस्सिद्धं मच्छास्त्रेष्वपि मानद! ॥
तथा भूमिश्च नीला च शेषभूते मते मम ॥
तथात्मनां च सर्वेषां ज्ञानतो व्याप्तिरिष्यते ॥
स्वरूपतस्तु न तयोः व्याप्तिर्वेदान्तपारग! ॥
'युवां तु विश्वस्य विभू जगतः कारणं परम् ॥' इति (भागवतम्)

*விஷ்ணுபத்நியாய் இருக்கும் இவள் (பிராட்டி) ஸ்வாதந்த்ரயத்தாலும், ஸ்வரூபத்தாலும் அத்புதையாய் இருக்கிருள். இவளிடமிருந்து ஜகத் உண்டாகிறது. வ்ருத்தியையும் பெறுகிறது என்று அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை கூறுகிறது.*

*இனி லக்ஷ்மீதந்த்ரத்தில் பிராட்டியே தன்னைப் பற்றிக் கூறுகிருள். எம்பெருமான் செய்யும் யாகத்தில் (ஜகத் ரக்ஷணமாகிற யாகத்தில்) ஸம்பந்தம் பெற்றிருப்பதால் நானும் உடனிருந்து செய்வதால் பகவானுக்குப் பத்நியாக இருக்கிறேன். நான் (பிராட்டி) நிருபாதிகமான ஸ்வாதந்த்ரயம் பெற்றவள். தயைக்கு இருப்பிடமானவள் உங்களுக்கெல்லாம் ஸ்வாமியாக உடையவளாக - இருக்கிறேன்.*

*மேலே விஷ்வக்ஸேநரை நோக்கி எம்பெருமான் கூறுகிறன்—*

*மேலும் பிராட்டியினுடைய ஸ்வரூபத்தையும் பற்றிச் சொல்லுகிறேன். மன ஒருமைப்பாட்டுடன் கேள்.[1]*

*குணத்தினுலும் ஸ்வரூபத்தினுலும் ஜகத்தை வ்யாபித்திருப்பது எங்கள் இருவருக்கும் பொதுவானது. நான்*

என்னுடைய தர்மபூத ஜ்ஞாநத்திலைும் ஸ்வரூபத்திலைும் ஜகத்தை வ்யாபித்திருப்பது போல் பிராட்டியும் தன்னுடைய தர்மபூத ஜ்ஞாநத்திலைும் தன் ஸ்வரூபத்திலைும் வ்யாபித்துள்ளாள். இதனால் உலகத்துக்கெல்லாம் நியந்த்ரியாய் - அதாவது உலகம் அனைத்தையும் நியமிப்பவளாய் - ஆள்பவளாய் இருக்கிறாள் இவள்.

நடுவில் நாமிங்குச் சில கூறுகிறோம். தற்போது விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் எம்பெருமான் பிராட்டிக்கு ஸ்வரூபத்திலைும் குணத்திலைும் - அதாவது தர்மபூத ஜ்ஞாநத்திலைும் வ்யாப்தி உண்டு. அதாவது பிராட்டி ஸ்வரூபத்திலைும் தர்மபூத ஜ்ஞாநத்திலைும் உலகத்தை என்னைப்போலவே வ்யாபித்துள்ளாள் என்று கூறியுள்ளான்.

ஸ்வாமி எம்பெருமானார் தாம் அருளிய ஶரணாகதி கத்யத்தில் முதலில் பிராட்டியைப் பற்றி ஒரு சூர்ணிகை (மஹாவாக்யம்) அருளிச் செய்துள்ளார். அதில் முதலில் 'பகவந்நாராயணாபிமத அநுரூப ஸ்வரூப-ரூபகுண' என்று தொடங்கி பிராட்டியினுடைய ஸ்வரூபம் - ரூபம் - குணம் முதலாக யாவும் பகவானான நாராயணனுக்கு அபிமதங்களாய் ஏற்றவையாய் - இருக்கின்றன. அதாவது பகவானுடைய ஸ்வரூபத்திற்கு ஏற்ற ஸ்வரூபம் உடையவள் பிராட்டி. அவ்வாறே பகவானுக்கு ஏற்ற ரூபம் உடையவள் பிராட்டி என்றெல்லாம் அருளுகிறார் ஸ்வாமி எம்பெருமானார். இவ்விடத்தில் பெரியவாச்சான்பிள்ளை:

இவள் (பிராட்டி) ஸ்வரூபம் எம்பெருமானுக்கு அநுரூபமாகையாவது 'यथा सर्वगतो विष्णुः तथैवेयम्' (யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம்) என்றும் त्वया च विष्णुना चाऽम्ब ! जगद्व्याप्तम् (த்வயா ச விஷ்ணுநா சாऽம்ப! ஜகத் வ்யாப்தம்) என்றும் சொல்லுகிறபடியே 'இவளுடைய ஸ்வரூபம் அவனோடு ஒக்கச் சொல்லலாம்படி இருக்கை'

என்று பிராட்டியின் ஸ்வரூபம் பகவானுடைய ஸ்வரூபத்துக்கு அநுரூபமாக இருககும் விதத்தை விவரித்துள்ளார். பெரியவாச்சான்பிள்ளையின் இந்த ஸ்ரீ ஸூக்தி பிராட்டிக்கு ஸ்வரூபத்தினுலேயே ஜகத் வ்யாப்தி உண்டு. அதாவது பிராட்டி தன் ஸ்வரூபத்தினுலேயே உலகம் எங்கும் வ்யாபித்திருக்கிருள் என்ற அர்த்தத்தைத் தருவதாக அமைந்துள்ளதைக் கவனிக்க வேண்டும்.

ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ஸம்ப்ரதாயத்தில் பிராட்டிக்கு ஸ்வரூப வ்யாப்தி உண்டு என்பது அங்கிகரிக்கப்பட்டுள்ளது. தென்ஞசார்ய ஸம்ப்ரதாயத்தில் பிராட்டிக்கு ஸ்வரூப வ்யாப்தி கிடையாது. அவள் தன்னுடைய தர்மபூத ஜ்ஞாநத்தினுல்தான் உலகத்தில் வ்யாபித்துள்ளாள் என்று அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இரண்டுவிதமான அபிப்ராயங்களுக்கும் அடிப்படையான காரணம் - பிராட்டிக்கு விபுத்வம் உண்டு என்பதும் அது இல்லை என்பதுமேயாகும்.

பிராட்டி ஜீவ வர்கத்தில் சேர்ந்தவளாகையால் அவளுடைய ஸ்வரூபம் எல்லா ஜீவர்களுடைய ஸ்வரூபத்தையும் போலே அணுவானது. ஆகவே பிராட்டியினுடைய அணுவான ஆத்ம ஸ்வரூபம் உலகம் முழுவதும் பரவி இருக்கிறது என்று கூறுவது அஸம்பாவிதம். ஆனுல் பிராட்டி உலகம் முழுவதும் வ்யாபித்துள்ளாள் என்று ப்ரமாணங்கள் கூறுகின்றன. சென்று ஆகவே அவற்றுக்கும் ஒரு வழி விடவேண்டும். அதற்காகப் பிராட்டி ஸ்வரூபம் அணுவாயிருந்தபோதும் அவளுடைய தர்மபூத - ஜ்ஞாநம் விபுவாய் எங்கும் பரவியுள்ளதால் அது காரணமாகப் பிராட்டியும் உலகம் அனைத்தும் பரவியுள்ளாள் என்று ப்ரமாணங்கள் கூறுகின்ற என்று மேலே காட்டிய ப்ரமாணங்களுக்கு ஒருவாறு அர்த்தம் சொல்லுகிறுர்கள் தென்ஞசார்ய ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த ஆசார்யர்கள்.

ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்தவர்கள், பிராட்டி ஈஶ்வரவர்க்கத்தில் சேர்ந்தவளாகையாலே அவளுடைய ஸ்வரூபமே விபு, எங்கும் பரவியுள்ளது என்று ஒப்புக்கொள்வதில் தவறு இல்லை. ஆக எம்பெருமான் - பிராட்டி இருவருமே ஈஶ்வரர்கள். இவ்விருவர்களுடைய ஸ்வரூபமும் விபுவானதே என்று கூறுகிருர்கள்.

பிறர்கள் பிராட்டியை ஜீவவர்கத்தில் சேர்த்துக் கொள்வதற்கு அவர்கள் கூறும் காரணத்தையும் நாம் இங்கு அவஶ்யம் அறிய வேண்டும்.

நாம் இப்போது காட்டியுள்ள வசநங்களின் அர்த்தம் முழுவதையும் விளக்கவில்லை. அதற்குள் நடுவில் இவ்விஷயத்தில் பிராட்டி - எம்பெருமான் இவ்விருவர்களைப் பற்றிய இரண்டு ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்தவர்களுடைய அபிப்ராயத்தை அவஶ்யம் அறிய வேண்டியிருப்பதால் இதை விவரிக்கிறோம். இதன் பிறகு முன்பு காட்டிய ப்ரமாண வசநங்கள் அனைத்துக்கும் அர்த்தம் - விளக்கம் தருகிறோம். அப்போதுதான் இந்த ப்ரமாணங்கள் எந்தப் பக்ஷத்துக்குப் பொருந்தும் என்பது தெளிவாகும்.

பிறர்கள் பிராட்டியை ஜீவவர்க்கத்தில் சேர்ப்பதற்கு அவர்கள் கூறும் காரணம் பின் வருமாறு :

பரதந்த்ர சேதநத்வம் (परतन्त्रचेतनत्वं) ஜீவாத்மாக்கள் அனைவருக்கும் லக்ஷணம் என்று கூறப்படுகிறது. பிறர்க்கு அதீநமாய் இருந்து கொண்டு சேதநனாயிருக்கைதான் ஜீவாத்மாக்கள் அனைத்துக்கும் லக்ஷணம். இது அனைவரும் ஒப்பியதேயாகும். பத்த ஜீவர்கள், முக்த ஜீவர்கள், நித்ய ஸூரிகள் என்று மூவகைப்பட்ட சேதநர்கள் அனைவருமே எம்பெருமானுக்குப் பரதந்த்ரராய் இருப்பவர்களாகையாலே பரதந்த்ர சேதநத்வம் என்ற ஜீவலக்ஷணம் இவர்கள் அனைவரிடத்திலும் இருக்கிறது. ஆகவே இவர்கள் அனைவரும் ஜீவாத்மாக்கள் எனப்படுகிறார்கள்.

இந்த வகையில் பிராட்டியும் சேதநை - அறிவுடையவள். எம்பெருமானுக்குப் பரதந்த்ரையாய் அதீநையாய் இருக்கிறாள். இது இரண்டு ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்தவர்களும் அங்கீகரித்த விஷயமாகும். ஆக பரதந்த்ர சேதநத்வம் என்ற ஜீவலக்ஷணம் பிராட்டிக்கும் உண்டாகையால் இவளும் ஒரு ஜீவனேதான். இவள் ஒருக்காலும் ஈஶ்வர கோடியில் சேரமுடியாது. ஆகையால் ஜீவவர்கத்தில் சேர்ந்த இவளுடைய ஸ்வரூபம்

அணுவாகத்தானிருக்க வேண்டும் என்பது பிறர்களுடைய கொள்கை. ஆக அணுவான ஸ்வரூபத்தைக் கொண்டு பிராட்டி உலகம் எங்கும் பரவி இருக்க முடியாது. அதனுல் தர்மபூத - ஜ்ஞாநத்தைக் கொண்டுதான் உலகம் முழுவதும் வ்யாபித்துள்ளாள் இவள் என்றுதான் பிராட்டிக்கு வ்யாப்தியைக் கூறும் ப்ரமாணங்களுக்கு அர்த்தம் சொல்ல வேண்டும் என்பது பிறர்களுடைய வாதம்.

ஸ்வாமி ஸ்ரீ தேஶிகஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த நம்முடைய கொள்கையையும் நாம் இப்போது அறிவோம்.

பரதந்த்ர சேதநனுயிருக்கை என்பது மட்டும் ஜீவலக்ஷணம் அன்று. ஒரு வஸ்துவுக்கு லக்ஷணம் சொல்வதானுல் அதன் ஸ்வபாவத்தை - தன்மையை நன்கு ஆராய்ந்தறிந்துதான் லக்ஷணம் சொல்ல வேண்டும். ஜீவாத்மாக்கள் யாவரும் பரதந்த்ர சேதநர்களே யாவார். ப்ரஹ்மா முதல் எறும்பு வரை அனைத்து ஜீவாத்மாக்களும் பரமாத்மாவுக்குப் பரதந்த்ரர்களே! ஆனுலும் பரமாத்மாவுக்கு மட்டுமா இவர்கள் பரதந்த்ரர்களாக இருக்கிறுர்கள்? பெருமாள் பிராட்டி இருவருக்குமே யன்ருே பரதந்த்ரர்களாயிருக்கிறுர்கள் இந்த ஜீவாத்மாக்கள்.

இதற்கு நிறைய ப்ரமாணங்கள் உள்ளன. இதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் லக்ஷணம் சொல்ல வேண்டும். அப்போது பரதந்த்ர சேதநனுயிருக்கை என்பது மட்டும் - அதாவது - 'பரதந்த்ரத்வே ஸதி சேதநத்வம்' என்பது மட்டும் ஜீவலக்ஷணமாகாது. பின்? எம்பெருமான் பிராட்டி இருவருக்கும் பரதந்த்ரனுயிருந்துகொண்டு சேதநனுயிருக்கை - அதாவது 'உபயபரதந்த்ரத்வே ஸதி சேதநத்வம்' என்பதே ஜீவலக்ஷணம். இப்போது பாருங்கள் - இந்த ஜீவலக்ஷணம் ஒரு நாளும் பரமாத்மாவுக்கு வராது, ஏன்? அவன் சேதநனுயிருந்தாலும் பரதந்த்ரன் அல்லனே. ஆகையால் பரதந்த்ரனுயிருந்து கொண்டு சேதநனுயிருக்கை எம்பெருமானுக்கு வராது. இவ்வாறே பிராட்டிக்கும் இந்த ஜீவலக்ஷணம் வராது. ஏன் என்ருல்? பிராட்டி எம்பெருமானுக்குப் பரதந்த்ரையாய் - அதாவது அதீனையாயிருந்து சேதனையாயிருந்தபோதிலும் உபய பாரதந்த்ர்யம் அதாவது பெருமாள் பிராட்டி இருவருக்கும்

அதீனையல்லளே! தனக்குத்தான் பரதந்த்ரையாய் இருக்க முடியாதே. ஆகையால் 'உபயபரதந்த்ரத்வே ஸதி சேதநத்வம்' என்ற இந்த ஜீவலக்ஷணம் பிராட்டிக்கு வராது. ஜீவலக்ஷணம் வராமையால் இவள் ஜீவவர்கத்தில் சேரமாட்டாள். ஆகையால் இவள் ஈஶ்வர கோடியில் சேர்ந்தவளேயாவாள். இவளுடைய ஸ்வரூபம் விபு தான் என்பது ஸ்ரீ தேஶிக ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்தவர்களுடைய ஸித்தாந்தம். இதை யாவரும் மனத்தில் வாங்கிக் கொள்ளவேண்டும்.

தற்போது நாம் மேலே காட்டியுள்ள ஶ்லோகங்கள் இந்த ஸித்தாந்தத்திற்கே அநுகூலங்களாக உள்ளன.

இனி முன் காட்டிய ஶ்லோகங்களின் அர்த்தங்களை விளக்குவோம்:

நான் உலகத்தை ஸ்வரூபத்தினுலும் தர்மபூத ஜ்ஞாநத்தாலும் வ்யாபித்திருப்பதுபோல் பிராட்டியும் தன் ஸ்வரூபத்தாலும் தர்மபூதஜ்ஞாநத்தாலும் வ்யாபித்துள்ளாள் என்று கூறியிருப்பது, பிராட்டியின் ஸ்வரூபம் அணுவன்று, விபுவானதே என்ற ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் கொள்கையை வலியுறுத்துகிறது என்பது யாவர்க்கும் தெளிவாக விளங்கும்.

முன்பு காட்டியுள்ள ஶ்லோகங்களை நன்கு கவனிக்க வேண்டும். மிக எளிய ஶ்லோகங்கள். படிக்கும்போதே பொருள் புலனுகும்.

குணத்தினுலும் ஸ்வரூபத்தினுலும் உலகத்தை வ்யாபித்திருப்பது என்பது எங்கள் இருவ்ருக்கும் (பிராட்டிக்கும் எனக்கும்) பொதுவானது - என்று எம்பெருமானே கூறுகிருன்.

இவ்வாறு பிராட்டிக்கும் தனக்கும் ஒற்றுமை (ஸாஜாத்யம்) சொன்ன எம்பெருமான் அடுத்துத் தனக்கும் பிராட்டிக்கும் உள்ள வேற்றுமையையும் (வைஜாத்யத்தையும்) கூறுகிருன்.

ஹே! விஷ்வக்ஸேநரே! (இதுவரை எனக்கும் அவளுக்கும் உள்ள ஒற்றுமையைக் கேட்டீர்) இனி எனக்கும் அவளுக்கும் உள்ள வைலக்ஷண்யத்தையும் வேற்றுமையையும் கூறுகிறேன். அதையும் நீர் கேளும்:

எம்பெருமான் விஷ்வக்ஸேநரை நோக்கிக் கூறி வருகிறுன் விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில்-

பிராட்டி எனக்கு ஶேஷபூதையாய் அதாவது அடியவளாய் இருந்து கொண்டே யாவற்றுக்கும் (தன்னை எம்பெருமானைத் தவிர்த்த எல்லாவற்றுக்கும்) ஈஶ்வரியாய் அதே ஸமயத்தில் எனக்கு மிகவும் வல்லபையாய் - வேண்டியவளாய் - அபிமதைதாய் இருக்கிறுள்.

இது பிராட்டியின் தன்மை.

நானே எனில் அவளுக்கும் ஜகத்துக்குமாக எல்லாவற்றுக்குமே ஈஶ்வரனுக - நியமிப்பவனுக வேதங்களில் ப்ரஸித்தனுக இருக்கிறேன்.

பிறர்கள் இங்குக் கவனிக்க வேண்டும். பிராட்டி பகவானுக்கு ஶேஷபூதையாய் அடியவளாய் இருக்கிறுள் என்ற காரணத்திஞல் அவளை ஜகதீஶ்வரியாக எப்படிக் கொள்ளலாம் என்ற அவர்களுடைய கேள்விக்கு இடமே இல்லை.

பிராட்டி எம்பெருமானுக்கு ஶேஷபூதையாய் இருப்பது இவள் ஜகத்துக்கு ஈஶ்வரியாய் இருப்பதைத்தடுக்காது - பாதிக்காது. அதாவது பிராட்டிக்கு உள்ள பகவச் சேஷத்வம், அவளுடைய ஜகதீஶ்வரத்வத்திற்கு பாதகமாகாது என்று ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ளது.

இதை அந்தப் பிறர்கள் புரிந்து கொண்டால், காலம், காகிதம், பணம், ஶக்தி யாவும் வீணுகாதிருக்கும் - மிச்சப்படும். வேறு நல்ல கார்யங்களைச் செய்ய இவை பயன்படும்.

மேலும் எம்பெருமான் தொடருகிறுன் :- ஓ விஷ்வக்ஸேநரே :-

'अस्याः मम च शेषं हि विभूतिरुभयात्मिका ।
इति श्रुतिशिरस्सिद्धं मच्छास्त्रेष्वपि मानद! ॥

(அஸ்யா: மம ச ஶேஷம் ஹி விபூதிருபயாத்மிகா।
இதி ஶ்ருதிஶிரஸ்ஸித்தம் மச்சாஸ்த்ரேஷ்வபி மாநத॥

ஓய் விஷ்வக்ஸேநரே! எங்கள் இருவருக்கும் கீழே கூறியபடி வேற்றுமை இருந்தபோதிலும் எங்கள் இருவரையுமே ஆத்மாவாகக் கொண்ட (உபயாத்மிகா) இந்த விபூதிகள் யாவும் இவளுக்கும் எனக்கும் சொத்தாய் (ஶேஷமாய்) இருக்கின்றன. இந்தக் கொள்கை வேதாந்தங்களிலும் ஸ்ரீ பாஞ்சராத்ரங்களிலும் ப்ரஸித்தம் என்கிறுன் எம்பெருமான்.

இங்கும் பிறர்கள் கவனிக்க வேண்டும். இந்த ஶ்லோகத்தில் எம்பெருமான் விபூதி: உபயாத்மிகா (विभूतिः उभयात्मिका) என்று விபூதியை 'உபயாத்மிகா' என்று விஶேஷணம் இட்டு அருளிச் செய்துள்ளான். 'உபயாத்மிகா' என்பதற்குப் பூர்வர்கள் 'உபௌ ஆத்மாநௌ யஸ்யா:' (उभौ - आत्मानौ - यस्याः) என்று விக்ரஹம் காட்டியுள்ளார்கள். இதனுல் கிடைக்கும் பொருள் - இந்த விபூதி - பிராட்டி, எம்பெருமான் ஆகிய எங்கள் இருவரையுமே ஆத்மாவாகக் கொண்டது - என்பதேயாகும். இந்த விபூதிக்குப் பிராட்டி, எம்பெருமான் இருவருமே ஆத்மாவாக இருக்கிறுர்கள் என்பது கிடைக்கிறது.

இதையே திருப்பிச் சொன்னுல் இந்த விபூதி - பிராட்டி, எம்பெருமான் ஆகிய எங்கள் இருவருக்குமே ஶரீரமாக இருக்கிறது என்பதும் நன்கு ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ளது.

இதில் பிராட்டிக்கு ஒரு பக்கத்தில் பகவச்சேஷத்வம், மற்ருெரு பக்கத்தில் ஜகச்சேஷித்வம் கூறப்பட்டுள்ளது. இந்தப் பெருமை பிராட்டிக்கு மட்டுமே.

மேலும் கூறுகிறுன் எம்பெருமான் - என்னுடைய பத்நிகளில் பெரிய பிராட்டியாரான ஸ்ரீ லக்ஷ்மீயோடு சேர்த்துச் சொல்லப்படுகிற பூமிப் பிராட்டி, நீளாப் பிராட்டி, இவ்விருவர்களும் கூட எனக்கு ஶேஷ பூதர்களே! அடியவர்களே! ஆனுல் இந்த இருவருக்கும் கூடப் பெரிய பிராட்டியாருக்குப் போலே ஸ்வரூப வ்யாப்தி - அதாவது தன் ஸ்வரூபத்தினுல் உலகம் எங்கும் வ்யாபித்திருத்தல் என்பது கிடையாது.

இந்த இருவர்களுக்கு மட்டும்தான் என்பதில்லை. ஜீவாத்மாக்கள் அனைவருக்குமே ஸ்வரூபத்தினால் ஜகத் வ்யாப்தி கிடையாது. இவர்களுக்கு எங்காவது ஜகத் வ்யாப்தி சொல்லப்பட்டிருந்தால் அது தர்மபூதஜ்ஞாநத்தில் ஏற்பட்ட வ்யாப்தியே யாகும். இவ்விஷயம் லக்ஷ்மீதந்த்ரம், விஷ்வக்ஸேந ஸம்ஹிதை முதலான ஸ்ரீ பாஞ்சராத்ர க்ரந்தங்களில் சொல்லப்பட்டுள்ளது.

பிறர்கள் பிராட்டிக்கு ஸ்வரூப வ்யாப்தி - அதாவது உலகம் அனைத்திலும் தன் ஸ்வரூபத்தினால் பரவியிருத்தல் என்பது கிடையாது என்று கூறுகிறார்கள்.

சது:ஶ்லோகீ வ்யாக்யாநத்தில் நாயனாராச்சான்பிள்ளை 4வது ஶ்லோகத்தின் பொருளை விளக்குமிடத்தில் பிராட்டிக்கும் விபுத்வம் கொள்ள வேண்டுமென்ற பூர்வபக்ஷத்தை விரிவாகக் காட்டிப் பிராட்டிக்கு விபுத்வம் கொள்ளக் கூடாது. அணுத்வத்தைத்தான் கொள்ளவேண்டும் என்பதை மிக விரிவாகக் கூறியுள்ளார்.

பிராட்டிக்குக் கூறப்பட்டுள்ள வ்யாப்தியை அகடித கடநா ஶக்தியினால் நிர்வாஹம் செய்யலாம் என்றும் விரிவாக விளக்கியுள்ளார்.

பிராட்டியை அசேதந வர்கத்திலும் சேர்க்கக் கூடாது, ஈஶ்வர வர்கத்திலும் சேர்க்கக் கூடாது. கடைசியாக ஜீவ வர்கத்தில்தான் இவளைச் சேர்க்க வேண்டும். ஆகவே எல்லா ஜீவர்களுக்கும் போலே இவளுக்கும் அணுவாயிருக்கும் தன்மையைத்தான் இசைய வேண்டும். விபுத்வம் விபுவாயிருக்கும் தன்மையை இசையக் கூடாது என்றும் விளக்கியுள்ளார்.

இப்படிப் பிராட்டியை ஈஶ்வரகோடியில் சேர்க்காமல் ஜீவ வர்கத்திலேயே சேர்ப்பதற்கு நாயனாராச்சான்பிள்ளை லக்ஷ்மீ ஸ்வரூபத்தை நிரூபிக்கும் அளவில் ஸ்வரூபவிபுத்வம் கூடாது; எங்ஙனே என்னில் 'போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா' இத்யாதி வேதாந்த ஸித்தமான அர்த்தங்கள் நம் தர்ஶநத்துக்கும் உண்டிறே என்று ஜ்ஞாநமிருப்பதால் பிராட்டி அசித் வர்கத்திலும் சேர்ந்தவள் அல்லள்; ஈஶ்வர

தத்த்வத்திலும் சேர்ந்தவள் அல்லள் என்பதை - 'ஈஶ்வரத்வ ப்ரஸங்கத்தாலும், 'ஈஶதே தேவ ஏக:' என்கிற ஏகத்வ ஶ்ருதியோடும் 'ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே' என்கிற ஸமாதிகதரித்ரத்வ ப்ரகாஶக ஶ்ருதியோடும் விரோதம் ப்ரஸங்கிக்கையாலும் ஈஶ்வரதத்த்வாந்தர்பாவம் கூடாது என்று விளக்கியுள்ளார் நாயனாராச்சான்.

பிராட்டியும் ஈஶ்வரதத்த்வமே தான் என்று கொண்டால் ஏற்கெனவே ஈஶ்வர தத்த்வமாக யாவராலும் கொள்ளப்பட்ட பகவானுகிற ஒரு ஈஶ்வர தத்த்வத்துடன் பிராட்டியாகிற ஈஶ்வர தத்த்வமும் சேர்ந்து இரண்டு ஈஶ்வர தத்த்வங்கள் ஒப்புக் கொண்டதாகிவிடுமே!

இதை அப்படியே நாமும் அதாவது நாயனாராச்சான் ஸம்ப்ரதாயத்தைப் பின்பற்றும் தென்னசார்ய ஸம்ப்ரதாயத்தவர்களும் ஒப்புக் கொண்டால் வேதாந்த விரோதம் வரும். வேதாந்த ஸித்தாந்தத்தில் ஜீவன் என்கிற சித் தத்த்வம், அசித் தத்த்வம், ஈஶ்வர தத்த்வம் என்று மூன்று தத்த்வங்கள்தான் ஒப்புக் கொள்ளப்பட்டன. பிராட்டிக்கு ஜ்ஞாநம் இருப்பதால் அது அடியோடு இல்லாத அசேதந தத்த்வத்தில் இவள் சேரமாட்டாள். ஈஶ்வர தத்த்வத்திலும் இவளைச் சேர்க்கக் கூடாது. ஈஶ்வரன் ஒருவன்தான் உளன் என்று முன் காட்டிய 'ஈஶதே தேவ ஏக:' என்ற உபநிஷத்தில் உள்ள 'ஏக:' என்ற ஶப்தம் பகவான் ஒருவன்தான் உலகத்தை ஆள்கிறுன் என்று ஏகத்வம் சொல்லியிருப்பதால் பிராட்டியையும் ஈஶ்வர தத்த்வத்தில் சேர்த்தால் அதாவது பிராட்டியையும் ஈஶ்வர தத்த்வமாகக் கொண்டால் பரமாத்மா ஒரு ஈஶ்வர தத்த்வம், பிராட்டி ஒரு ஈஶ்வர தத்த்வம் என்றதாகிவிடுகிறது. அப்போது 'தேவ: ஏக: ஈஶதே' என்று கூறப்பட்ட ஏகத்வம் ஈஶ்வரதத்த்வம் ஒன்றுயிருக்கும் தன்மை விரோதிக்கும்.

மேலும் எம்பெருமானைப் போலே பிராட்டியும் ஈஶ்வர தத்த்வம் என்றல் எம்பெருமானுக்கு ஸமனும், மேம்பட்டவனும் கிடையாது என்று 'ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே' என்ற உபநிஷத் வாக்யத்தில் கூறப்பட்ட ஒத்தாரையும் மிக்காரையும் இல்லாத் தன்மை

இல்லையாகிவிடும். எம்பெருமானுக்கு ஸமமாகப் பிராட்டியும் இருக்கிறளே! ஆகையால் பிராட்டி ஈஶ்வர தத்த்வத்தில் சேரமாட்டாள். பின்னர் ஜீவ தத்த்வத்திலேயே இவளைச் சேர்க்க வேண்டும். இந்த நிலை ஏற்பட்ட பிறகு இவளுக்கு விபுத்வம் கொள்ளக் கூடாது. ஜீவர்கள் அனைவருமே அணுஸ்வரூபர்களாக இருக்க இவர்களுள் ஒருத்தியான பிராட்டிக்கும் அணுத்வமேதான் கொள்ளப்பட வேண்டும் என்று இவ்வாறன விசாரங்கள் மிக விரிவாக சது:ஶ்லோகீ வ்யாக்யாநத்தில் நாயனுராச்சான் பிள்ளையினல் காட்டப்பட்டுள்ளன.

பிராட்டியை ஈஶ்வர தத்த்வத்தில் சேர்த்துக் கொண்டால் இவளும் எம்பெருமானுக்கு ஸமமாக ஈஶ்வர தத்த்வமாக இருப்பதால் ஈஶ்வரன் ஏகன் என்ற உபநிஷத் ஸித்தாந்தம் குலையும் என்பது இவர்களுடைய வாதம்.

பிராட்டி எம்பெருமானுக்கு அத்யந்தம் பரதந்த்ரையாய் அவனுக்கு ஸ்வரூப நிரூபக தர்மபூதையாய் அவனுக்கு ஶரீரமாய் இருக்கிறள் என்பதை ஸ்ரீ தேஶிக ஸம்ப்ரதாயத்தவர்களும் இசைந்திருக்கிறர்கள்.

இப்படி இருக்கும் இவளுக்கு ஶ்ருதி ஸ்ம்ருதி முதலான பல ப்ரமாணங்களால் ஈஶ்வரத்வத்தை அவஶ்யம் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆக இவளையும் ஈஶ்வர தத்த்வமாகக் கொண்டாலும் இவள் எம்பெருமானுக்கு ஒருபோதும் ஸமமாக மாட்டாள். அவன் ஸர்வப்ரதாநன். பிராட்டியும் உட்பட எல்லாப் பொருள்களுக்கும் ப்ரதாநன். பிராட்டி எம்பெருமானைத் தவிர்த்த மற்றைய பொருள்களுக்கு ப்ரதாந பூதையானவள்.

இப்படி வேற்றுமை இருந்த போதிலும் இவளையும் ஈஶ்வர தத்த்வமாக இசைய வேண்டியுள்ளது.

இரண்டு ப்ரஹ்மங்கள் உண்டு என்பது எங்கும் கூறப்படவேயில்லை என்பவர்க்கு இவ்விஷயத்தில் ப்ரமாணத்தைக் காட்டுகிறோம்.

ஸ்ரீ பாஞ்சராத்ரத்தைப் பிறர்கள் தங்களுக்கு வேண்டிய விஷயத்திற்கு மட்டும் ப்ரமாணமாகக் காட்டுகிறார்கள். அதே ஸ்ரீ பாஞ்சராத்ர ஶாஸ்த்ரம் கூறும் மற்றைய விஷயங்களையும் பிறர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். லக்ஷ்மீதந்த்ரத்தில் பிராட்டியே அருளியுள்ள 'தௌ ஆவாம் ஸர்வகாரணம்' நாங்கள் இருவருமே ஸர்வத்திற்கும் ஸர்வகாரணம் என்று எம்பெருமானைப் போலே தன்னையும் ஸர்வ ஜகத்துக்கும் காரணமாகக் கூறியுள்ளாள் இம்மாதியான ' ஸ்பஷ்ட ப்ரமாணங்கள் ஸுதர்ஶநாழ்வான் விஷ்வக்ஸேநர் ஆகியவர் விஷயத்தில் கிடையா. ஆகவே இவர்களையும் ஸர்வ ஜகத் காரணமாகக் கொள்ளாலாமே என்ற பிறர் கேள்வியும் அர்த்தம் அற்றது.

இனிப் பிராட்டியும் ப்ரஹ்மம்தான் என்பதற்கு ப்ரமாணங்களைக் காட்டுகிறோம்.

நடாதூர் அம்மாள் என்று ப்ரஸித்திபெற்ற ஸ்ரீ வாத்ஸ்ய வரத குரு அருளிய 'ப்ரபந்ந பாரிஜாதம்' என்ற க்ரந்தம் ப்ரஸித்தமானது ஒன்று உண்டு. ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகாசார்யர், ஸ்வாமி ஸ்ரீ தேஶிகனுடைய மாமாவான வாதிஹம் ஸாம்புவாஹரான ஆத்ரேய ராமாநுஜாசார்யர் முதலான ப்ரஸித்த பண்டிதர்களுக்கு ஆசார்யராகத் திகழ்ந்தவர். ஸ்ரீகாஞ்சி தேவாதிராஜனால் தனக்குத் தாயார் (அம்மாள்) என்று அபிமாநிக்கப் பெற்றவர். 'எங்கள் ஆழ்வான்' என்று ப்ரஸித்தரான ஸ்ரீ விஷ்ணுசித்தருடைய ப்ரிய ஶிஷ்யர்.

இவர் அருளிய க்ரந்தங்கள் பலவற்றுள் - இந்த ப்ரபந்த பாரிஜாதம் என்ற க்ரந்தம் ப்ராமாணிகர்கள் பலராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதில் பல பத்ததிகள் உள்ளன. இவற்றுள் ஆறுவதான பத்ததி பகவத் பரிஜநோபாஸநாபத்ததி: என்பதாகும். இதில் ஸ்ரீ பாஞ்சராத்ர ஶ்லோகங்களையும் ப்ரமாணமாக எடுத்து இவற்றுடன் தம்முடைய ஶ்லோகங்களையும் நடுநடுவே சேர்த்து தத்த்வ நிர்ணயம் செய்து வருகிறார் அம்மாள்.

'अहन्ता ब्रह्मणस्तस्य साऽहमस्मि सनातनी ।
आत्माऽस्मि सर्वभूतानां अहंभूतो हरिः स्मृतः ॥
भवतस्तस्य देवस्य स भावोऽहीमितीता ।
भवद्भावात्मकं ब्रह्म ततस्तच्छाश्वतं पदम् ॥

भवन् नारायणो देवो भावो लक्ष्मीरहं परा ।
लक्ष्मीनारायणाख्यं तत् ततो ब्रह्म सनातनम् ॥

अहन्तया समायुक्तो ह्ययमर्थः प्रसिद्ध्यति ।
अहमर्थसमुत्था च साऽहन्ता परिकीर्तिता ॥

अन्योन्यस्याऽविनाभावात् अन्योन्येन समन्वयात् ।
तादात्म्यं विद्धि सम्बन्धं मम नाथस्य चोभयोः ॥

पराशरस्तु भगवान् अहीनां ब्रह्मरूपिणीम् ।
'नित्यैवैषा जगन्माता विष्णोः श्रीरनपायिनी ॥

यथा सर्वगतो विष्णुः तथैवेयं द्विजोत्तम ।

(பிராட்டி கூறுகிறாள் - லக்ஷ்மீதந்த்ரத்தில் :-

நான் ப்ரஹ்மமாகிற எம்பெருமானுக்கு 'அஹந்தா' என்ற தர்மமாக இருக்கிறேன். நான் எப்போதும் உள்ளேன். ஸர்வபூதங்களுக்கும் ஆத்மாவாக இருக்கிறேன். 'ஹரி' என்கிற எம்பெருமான் 'அஹம்' என்ற பொருளாக இருக்கிறான் என்று ஸ்ம்ருதிகள் கூறுகின்றன.

'பவந்' (உளன்) எனப்படுகிற அந்த தேவனான எம்பெருமானுக்கு அந்த பாவமாக நான் இருக்கிறேன் என்று

கூறப்பட்டுள்ளேன். இங்கு 'பவந்' (भवन्) என்ற சொல் பொதுவில் தர்மியைக் குறிக்கிறது. இவ்வாறே 'பாவ:' (भाव:) என்ற சொல் தர்மத்தை (பண்பை)க் குறிக்கிறது.

ஆக எம்பெருமான் 'பவந்' (भवन्) அதாவது தர்மீ எனவும், நான் 'பாவ:' (भाव:) என்வும் கூறப்படுகிறோம்.

நாராயணன் 'பவந்' எனப்படுகிறான். சிறந்தவளாகிய, லக்ஷ்மீயாகிய நான் 'பாவ:' (भाव:) என்று சொல்லப்படுகிறேன்.

ஆகையால் அந்த பரப்ரஹ்மம் லக்ஷ்மீநாராயண ரூபமாக இருக்கிறது. இது ஸநாதநமான ப்ரஹ்மம்.

அஹமர்த்தமானது 'அஹந்தா' என்ற தர்மத்துடன்தான் நிலைபெறுகிறது. 'அஹந்தா' என்ற தர்மம் இல்லாவிடில் அஹமர்த்தமே இதர விலக்ஷணமாக நிலைபெறாது என்றபடி.

'அஹந்தா' எனப்படும் நானும் 'அஹமர்த்தத்தில்' நிலைபெற்றிருப்பவள் ஆவேன்.

'அஹந்தா' என்ற என்னால் 'அஹமர்த்தம்' எனப்படும் எம்பெருமான் ஸர்வ இதர விலக்ஷணனாக ஸித்திக்கிறான். அஹந்தா எனப்படும் நானும் (லக்ஷ்மியும்) அஹமர்த்தம் எனப்படும் ப்ரஹ்மத்தில்தான் நிலைபெற்றிருக்கிறோம். ஆகவே 'அஹந்தா' இல்லாவிடில் அஹமர்த்தம் கிடையாது. இதர விலக்ஷணமாக ஸித்திக்காது. ஆதாரமான அஹமர்த்தம் எனப்படும் எம்பெருமானில்லையேல் அதன் பண்பான 'அஹந்தா' எனப்படும் நானும் ஸித்திக்க மாட்டேன். இப்படி எங்கள் இருவருக்கும் 'அவிநாபாவ ஸம்பந்தம்' (ஒன்றை விட்டுப் பிரிந்து மற்றொன்று வாழ முடியாத ஸம்பந்தம்) உள்ளதாகையால் நாங்கள் இருவரும் எல்லா விஷயங்களிலும் பிரிவற்றிருக்கிறோம். ஆகவே எல்லாக் கார்யங்களிலும் நாங்கள் இருவரும் ஸம்பந்தப்படுகிறோம்.

பிராட்டி கூறுகிறாள் - எனக்கும் எம்பெருமானுக்கும் விட்டுப்பிரியாமல் இருக்கும்படியான ஸம்பந்தம் உள்ளதால் எங்கள் இருவருக்குமே தாதாத்ம்யம் (அபேதம்) ஒற்றுமை உள்ளதாக நினை என்று.

நடுவிலே நடாதூர் அம்மாள் தம்முடைய சொந்த வாக்கினால் பராஶர மஹர்ஷியும் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில்.

'நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோரேஷாऽநபாயிநீ।
யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம!॥

என்று மைத்ரேயரை நோக்கி, ப்ராஹ்மணஶ்ரேஷ்டரே! எம்பெருமானைப் போலவே பிராட்டியும் உலகம் முழுவதும் வ்யாபித்துள்ளாள். எம்பெருமானை விட்டுப் பிரியாதவள் என்றெல்லாம் விளக்கி, பிராட்டி எங்கும் நிறைந்தவள் என்பதை நன்கு விவரித்துள்ளார்.

ஶ்வேதாஶ்வதரம் என்ற ப்ரஸித்தமான உபநிஷத்தில் இரண்டாவது அத்யாயத்தில் உள்ள ஒரு மந்த்ரத்தில் 'युजे वां ब्रह्म' (யுஜே வாம் ப்ரஹ்ம) நீங்கள் இருவரும் ஒரு ப்ரஹ்மமே. உங்களைத் துதிகளோடு சேர்க்கிறோம். அதாவது உங்களைத் துதிக்கிறோம் என்று உள்ளது.

ஆகப் பிராட்டியும் எம்பெருமானும் இருவரும் சேர்ந்து ஒரு ப்ரஹ்மமே என்பது நன்கு விளங்குகிறது.

இந்த ஶ்வேதாஶ்வதர உபநிஷத்திலேயே முதல் அத்யாயத்தில் क्षरात्मानौ ईशते देव एकः (க்ஷராத்மாநௌ ஈஶதே தேவ ஏக:) சேதந - அசேதநங்களை தேவன் ஒருவனே ஆள்கிறான் - நியமிக்கிறான் என்று உள்ளது. முன் கூறிய வகையில் பிராட்டியும் ப்ரஹ்மமானால் அவளும் உலகை

ஆள்கிறாள் என்று ஸ்த்ரீலிங்கம் இருக்க வேண்டும் என்ற கேள்வி வர, ஈஶதே தேவ: ஏக: என்ற ஶ்ருதியில் உள்ள பும்லிங்கத்தைக் கருத்தில் கொள்ள வேண்டாம். அதற்கு அர்த்தம் கிடையாது. இவ்விஷயம், பூர்வமீமாம்ஸையில் 6.1.3.8., 6.1.4.17 என்ற இரண்டு ஸூத்ரங்களில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ந்யாயத்தினால் கிடைக்கிறது என்றும் பூர்வர்கள் ஸ்தாபித்துள்ளனர்.

அங்குப் பூர்வமீமாம்ஸையில் பத்நிக்கும் யாகத்தில் கர்த்ருத்வம் இருப்பதால் அவளும் யாகம் செய்கிறாள் என்று சொல்ல வேண்டியிருக்க अग्निहोत्रं जुहुयात् स्वर्गकामः (அக்நிஹோத்ரம் ஜுஹுயாத் ஸ்வர்ககாம:) என்ற பும்லிங்கம் பொருந்தாதே என்ற கேள்வி வர - அதற்கு அங்குள்ள பும்லிங்கத்திற்கு அர்த்தம் கிடையாது என்றே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரிதான் இங்கும்.

ப்ரஹ்மஶப்தத்தின் பொருளைக் காட்டும்போது எம்பெருமான் பிராட்டி என்று இரண்டு ப்ரஹ்மம் என்று கூறினாலும் ஒன்று விஶேஷணமாய், மற்றொன்று விஶேஷ்யமாய் விஶேஷ்யத்தில் விஶேஷணம் அடங்கி இருப்பதால் ப்ரஹ்மம் ஒன்றே என்று கூறுவதிலும் முரண்பாடு கிடையாது.

முன்பு காட்டியுள்ள உபநிஷத் வாக்யத்தில் युवां ब्रह्म (யுவாம் ப்ரஹ்ம) நீங்கள் இருவரும் ப்ரஹ்மம் என்றிருப்பதைக் கவனிக்க வேண்டும். 'யுவாம்' என்பது முன்னிலை இருமை - யுஷ்மச்சப்தத்தில் ப்ரதமா-த்விவசநம் கொண்டது. நீங்கள் இருவரும் என்றபடி. மேலே 'ப்ரஹ்ம' என்று ஏகவசநாந்தமான ஶப்தம் உள்ளது. நீங்கள் இருவரும் ஒரே ப்ரஹ்மம் என்பது இதன் பொருள். இதற்கு ஶாஸ்த்ரீயங்களான உதாஹரணங்கள்

பலப்பல உள்ளன. वेदाः प्रमाणम् (வேதா: ப்ரமாணம்) जात्याकृति - व्यक्तयः पदार्थः (ஜாத்யாக்ருதிவ்யக்தய: பதார்த்த:) என்றிவை முதலானவை. நான்கு வேதங்களும் ஒரே ப்ரமிதிக்கு - யதார்த்தஜ்ஞாநத்திற்குக் காரணம். ஜாதி-ஆக்ருதி - வ்யக்தி ஆகியவை ஒரே ஶக்தியினால் கூறப்படுபவை. என்றெல்லாம் ஶாஸ்த்ரஜ்ஞர்க்கு ஸம்மதமான விஷயம். ஶாஸ்த்ர வாஸனை இல்லாத பிறர்க்கு இது புரியாது.

ஆக எம்பெருமான், பிராட்டி இருவரும் சேர்ந்துதான் ப்ரஹ்மம். மேலும் இவ்விஷயத்தில் சில ப்ரமாணங்கள் காட்டுகிறோம். ப்ரஹ்மஶப்தம் யோகரூடம் என்பது அத்யாத்மஶாஸ்த்ரம் அறிந்த அனைவரும் இசைந்த விஷயம்.

தமிழில் இடுகுறிக்காரணப்பெயர் என்பர். பங்கஜம் என்ற சொல் இதற்கு உதாஹரணம். பங்காத் ஜாதம் - சேற்றிலிருந்து பிறந்தது - உண்டானது. ஆகவே பங்கஜம் என்றது காரணப்பெயர். யௌகிகஶப்தம் ஆகிறது.

தவளை முதலான நீர்வாழ் ஜந்துக்கள் ஆம்பல் முதலிய புஷ்பங்கள் இவை கூட கூடப் பங்கஜங்கள் ஆகிவிடும். அவையும் சேற்றிலிருந்து உண்டாகின்றவையே! ஆனால் அவற்றைப் பங்கஜம் என்ற சொல்லால் யாரும் குறிப்பதில்லை.

பத்மம் எனப்படும் தாமரைப் பூவைத்தான் பங்கஜம் என்று குறிப்பிடுகிறார்கள்.

ஆக பங்கஜத்வம் - சேற்றிலிருந்து பிறத்தல் என்ற காரணத்தை - நிமித்தத்தைக் கொண்டு பங்கஜ ஶப்தம் வழங்கப்படுமாகில் தவளை - ஆம்பல் முதலியவற்றையும் பங்கஜம் என்ற சொல்லால் கூற வேண்டிவரும். இதற்காக பங்கஜ ஶப்தத்திற்கு யோக ஶக்தியை மட்டும் கொள்ளாமல் ரூடி ஶக்தியையும் கொள்ளப்பட்டுள்ளது. இந்த ரூடி ஶக்தியினால் பத்மத்வம் - தாமரைப் பூவாயிருக்கை என்ற காரணத்தையும் - நிமித்தத்தையும் கொண்டு இந்தப் பங்கஜம் என்ற சொல் வழங்கப்படுகிறது.

ஆகப் பங்கஜம் என்ற சொல் சேற்றில் பிறப்பதும் பத்மமாயும் இருக்கும் பொருளைத்தான் குறிக்கும். ஆம்பல்,

தவளை முதலியன சேற்றில் தோன்றுபவை ஆனாலும் பத்மம் அன்று. ஸ்தலபத்மம் எனப்படும். ரோஜா என்ற புஷ்பம் பத்மம் ஆயினும் அது சேற்றில் பிறக்காத காரணத்தினால் பங்கஜம் . ஆகாது. ஆகையால் அதைப்பங்கஜம் என்ற சொல்லால் குறிப்பதில்லை.

ஆக பங்கஜம் என்ற சொல் யோக ஶக்தியினால் ப்ரவ்ருத்திப்பதற்கு நிமித்தம் பங்கஜத்வம். ரூடி ஶக்தியினுல் ப்ரவ்ருத்திப்பதற்கு நிமித்தம் பத்மத்வம். இது ஶாஸ்த்ரஜ்ஞர்கள் யாவரும் அறிந்த - இசைந்த விஷயம்.

இம்மாதிரிதான் ப்ரஹ்ம ஶப்தமும். ப்ரஹ்ம ஶப்தம் யோகஶக்தியினால் ஒரு பொருளைக் கூறுவதற்கு ப்ரவ்ருத்தி நிமித்தம் நிரதிஶயப்ருஹத்வம் - நிரதிஶய ப்ரஹ்மணத்வம். இதை மட்டும் கொண்டு ப்ரஹ்ம ஶப்தம் ஶ்ரிய: பதியான எம்பெருமானைக் குறிக்கிறது என்று கூற முடியாது.

ஶிவன் முதலான வேறு தேவதைகள் தான் ஜகத் காரணம் என்று கூறும் மற்றைய ஸித்தாந்திகள் இந்த நிரதிஶய - ப்ருஹத்வம், ப்ரஹ்மணத்வம் இரண்டும் ஶிவன் முதலானவர்க்கும் உண்டு என்றுதான் கூறுவர்.

தான் பெரியதாயிருக்கை - ப்ருஹத்த்வம், தன்னை அடைந்தவர்களையும் பெரிதாக ஆக்குகை, ப்ருஹ்மணத்வம். இவையிரண்டும் நிரதிஶயமாய் - தன்னைவிட வேறு எதுவும் சிறந்திருக்காதபடித்தானே சிறந்ததாய் இருக்க வேண்டும். இது வேறு தேவதைகளுக்கும் உண்டென்று பிறருடைய வாதத்தினால் ஏற்படுமாகையால் ஶிவன் முதலானோரையும் ப்ரஹ்மம் என்று கூறவேண்டி வரும்.

இதைத் தவிர்ப்பதற்காக ப்ரஹ்ம ஶப்தத்திற்கு ரூடி ஶக்தியையும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆகவே ப்ரஹ்மஶப்தம் யோகரூடம். யோகஶக்தியும் கொண்டது, ரூடி ஶக்தியும் கொண்டது.

யோகஶக்தியினால் ப்ரஹ்மஶப்தம் ஒரு பொருளைக் கூறும்போது அதற்குக் காரணமாய் - நிமித்தமாயிருப்பது நிரதிஶய ப்ரஹ்மத்வமும், நிரதிஶய ப்ரஹ்மணத்வமும் ஆகும்.

இது ஸ்ரிய: பதியான எம்பெருமானைத் தவிர்த்த மற்றைய தேவதைகளுக்கும் பிற மதத்தினர் கருத்தினால் இவை உண்டு என்ற காரணத்தினால் அவர்களை ப்ரஹ்மஸப்தத்தினால் குறிப்பிடலாமே என்ற கேள்விக்குப் பரிஹாரம் செய்யவே தான் ப்ரஹ்ம ஸப்தத்திற்கு ரூடி ஸக்தியையும் கொள்கிறோம். இந்த ரூடி ஸக்தியினால் ப்ரஹ்ம ஸப்தம் ஒரு பொருளைக் கூற வேண்டுமானால் அதற்குக் காரணம் - நிமித்தம், ஸ்ரிய: பதியாயிருக்கை. அதாவது ஸ்ரிய: பதித்வம் தான் என்று ஸ்வாமி ஸ்ரீ தேஸிகனுடைய க்ரந்தங்கள் தத்த்வடீகை முதலானவற்றில் உள்ளன.

இவ்வளவால் என்ன கூறப்பட்டது என்றால்? ப்ரஹ்மம் என்ற ஸப்தம் ஒரு பொருளை அறிவிக்க - போதிக்க ப்ரவ்ருத்தித்தால் - முற்பட்டால் அது நிரதிஸய ப்ருஹத்த்வம் - நிரதிஸய ப்ரஹ்மணத்வம் - ஸ்ரிய: பதித்வம் ஆகிய இவற்றை நிமித்தமாகக் கொண்டுதான் ப்ரவர்த்திக்கும்-முற்படும்.

நிரதிஸய ப்ரஹ்மமும் நிரதிஸய ப்ரஹ்மணமுமாய், ஸ்ரிய: பதியாயும் இருக்கிற பொருளைத் தான் ப்ரஹ்மஸப்தம் குறிக்கும் என்றபடி.

நிரதிஸய ப்ருஹத்வம், நிரதிஸய ப்ரஹ்மணத்வம் யோகஸக்யதாவச்சேதகம் - அதாவது ப்ரஹ்மஸப்தத்தினால் ஒரு பொருள் யோகஸக்தியினால் கூறப்படுவதற்குக் காரணம் - நிமித்தமாகிறது.

ஸ்ரிய: பதித்வம் ரூடிஸக்யதாவச்சேதகம். அதாவது ப்ரஹ்மஸப்தம் ரூடிஸக்தியினால் ஒரு பொருள் கூறப்படுவதற்குக் காரணம் - நிமித்தம் ஆகிறது. ஆகவே அது ரூடிஸக்யதாவச்சேதகம் ஆகிறது.

ப்ரஹ்மஸப்தத்திற்கு யோகஸக்தி, ரூடிஸக்தி என்ற இரண்டு ஸக்திகளையும் அவஸ்யம் ஒப்புக் கொள்ள வேண்டும். ப்ருஹத்வாத் ப்ருஹ்மணத்வாச்ச தத் ப்ரஹ்மேதி கீர்த்யதே என்ற ப்ரமாணம் ப்ருஹத்வம், ப்ருஹ்மணத்வம் இவற்றைக் கொண்டுதான் ப்ரஹ்மஸப்தம் ஒரு பொருளைக் கூறும் என்று காட்டுவதால் இவையிரண்டையும் ப்ரஹ்மஸப்தத்திற்கு யோகஸக்திப்ரவ்ருத்தி நிமித்தமாகக் கொள்ள வேண்டும்.

இவற்றை விடக்கூடாது, விட முடியாது. மற்றைய தேவதைகளை ப்ரஹ்மஶப்தம் குறிக்காமல் இருப்பதற்காக ஶ்ரிய: பதித்வத்தை ரூடிஶக்தியின் ப்ரவ்ருத்தி நிமித்தமாகக் கொள்ளவேண்டும்.

இப்போது ஶ்ரிய: பதித்வமும் ப்ரஹ்ம ஶப்தத்திற்கு ப்ரவ்ருத்தி நிமித்தம் என்று ஏற்பட்டு விட்டதால் அதுவும் ப்ரஹ்மஶப்தத்தின் பொருள்தான்.

ஶ்ரிய: பதித்வம் என்பது பிராட்டிக்குப் பதியாயிருக்கும் தன்மை. அதாவது பதி என்ற ஸம்பந்தத்தினால் ஶ்ரியைப் பெற்றிருத்தலேயாகும். அதாவது ஶ்ரீ என்பதேயாகும்.

ப்ரவ்ருத்தி நிமித்தமும் அந்தப் பதத்தின் அர்த்தமேதான். ஆகையால் ஶ்ரீயும் ப்ரஹ்ம ஶப்தத்தின் பொருள் என்பதில் எந்த விதமான பாதகமும் கிடையாது.

श्रीमति ब्रह्मतोक्तेः (ஸ்ரீமதி ப்ரஹ்மதோக்தே:) என்ற அதிகரணஸாராவளி ஶ்லோகத்தின் வ்யாக்யாநத்தில் அதிகரணசிந்தாமணியில் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் திருவுள்ளத்தை ஸ்வாமி குமாரர் ஸ்ரீ வரதாசார்ய ஸ்வாமி இவ்விஷயத்தில் நன்கு விளக்கியுள்ளார். அவ்விடத்தில் உள்ள வாக்யத்தை மட்டும் அப்படியே தருகிறோம்-

''अनवधिकातिशययोः बृहत्त्व ब्रह्मणत्वयोः देवतान्तरपारम्यशङ्कावतां तद्वृत्तित्वसम्भावनया व्यावर्तकत्वायोगेन श्रीरेव देवतान्तर व्यावर्तिका स्वरूपनिरूपकभूता ब्रह्मपद प्रवृत्ति निमित्ततया स्वीकर्तव्येति हृदयम्-''
*என்று உள்ளது.*

*ப்ரவ்ருத்தி நிமித்தமாயிருப்பது பொருள் ஆகும் என்பது லோகஸித்தம். घट (கட) ஶப்தம் घटत्व (கடத்வம்) என்ற ஜாதியை ப்ரவ்ருத்தி நிமித்தமாகக் கொண்டுள்ளமையால் ப்ரவ்ருத்தி நிமித்தமான घटत्वமும் (கடத்வமும்) घट (கட) ஶப்தத்தின் அர்த்தம்தானே. இவ்வாறுதான் இங்கும்.*

*ஆகையால் பிராட்டியும் ப்ரஹ்மம் தான். பிராட்டி, எம்பெருமான் இருவரிடமும் உள்ள ப்ரஹ்மத்வம் ஒன்றேயாதலால் ப்ரஹ்மம் ஒன்றுதான் என்பதும் ஸித்திக்கிறது.*

*பிராட்டி எம்பெருமான் இருவரிடமும் உள்ள ஶேஷித்வம் ஒன்றேயாகையால் எப்படி ஶேஷி-த்வித்வம் (ஶேஷிகள் இரண்டாயிருக்கை) என்பது ஸித்திக்காதோ! அப்படியேதான் பிராட்டி எம்பெருமான் இருவரிடமும் உள்ள ப்ரஹ்மத்வம் ஒன்றேயாகையால் ப்ரஹ்ம-த்வித்வம் வரவே வராது. ப்ரஹ்மாத்வைதமேதான் ஸித்திக்கும். இதைப்பிறர் புரிந்து கொள்ளவேண்டும்.*

*ஆக இவ்வளவால் பிராட்டி எம்பெருமானுக்குப் பரதந்த்ரை தான். அவனுக்கு இவள் ஸ்வரூப நிரூபக தர்மமாயிருக்கிறாள். எம்பெருமானுக்கு ஶரீரமாக இருப்பவள் தான். ஆயினும் ஸர்வஜகத்துக்கும் பிராட்டியும் எம்பெருமானும் ஶேஷியாயிருப்பது போல் இருவரும் ஸர்வஜகத்துக்கும் ஆத்மாவாய், நியாமகர்களாய், காரண-பூதர்களாய், ப்ரஹ்ம ஶப்தார்த்தமாயும் அதாவது ப்ரஹ்மமாகவும் இருப்பவர்கள் தான் என்பது ப்ரமாணங்களுடன் நன்கு விளக்கப்பட்டுள்ளது.*

*'ப்ரஹ்ம ஶப்தேந ச புருஷோத்தமோऽபிதீயதே என்றிவை முதலான வ்யவஹாரங்கள் விஶேஷ்ய பூதனான எம்பெருமானைப் பற்றியவை.*

ஆகையால் ஶ்ருதி - ஸ்ம்ருதி - புராண - இதிஹாஸ - ஸ்ரீ பாஞ்சராத்ரம் - ஆழ்வார்களுடைய அருளிச்செயல்கள் இவை எவற்றுக்கும் எவ்வித முரண்பாடும் கிடையாது.

ஸ்ரீ தத்த்வதீபிகை கலக்கமில்லாதபடி ஸ்ரீ தத்த்வத்தை இவ்வாறு ப்ரகாஶிப்பித்துள்ளது. ஸாத்விகர்களான மஹான்கள் இந்த உண்மையை உணர்ந்து ஸந்தோஷிக்கிறார்கள்.

மூர்க்கர்கள் இவ்விஷயத்தைக் கொண்டாலும் கொள்ளாவிடிலும் நமக்கேதும் குறையில்லை.

இந்த க்ரந்தத்தினால் ஸ்ரீ மாலோலனும் நம்முடைய பூர்வாசார்யர்களும் மகிழ்வது திண்ணம்.

श्रीतत्त्वदीपिका चैवं श्रियस्तत्त्वमनाकुलम् ।
प्रकाशयति, सत्त्वस्थाः बुद्ध्वा तुष्यन्ति तात्त्विकम् ॥
मूर्खाः गृह्णन्तु वा मा वा नाऽत्र चिन्ता मनागपि ।
ब्रह्मत्वं कारणत्वं च श्रियस्सम्यक् प्रतिष्ठितम् ॥
ग्रन्थेनाऽनेन च श्रीमान् नृहरिस्तत्पदाश्रिताः ।
पूर्वे च गुरवो नूनं प्रसीदेयुरहं कृती ॥

ஸ்ரீ ததத்வதீபிகா சைவம் ஶ்ரியஸ்த்தவம் அநாகுலம் ।
ப்ரகாஶயதி, ஸத்த்வஸ்தா: புத்த்வா துஷ்யந்தி தாத்த்விகம் ॥
மூர்க்கா: க்ருஹ்ணந்து வா மா வா நாऽத்ர சிந்தா மநாகபி ।
ப்ரஹ்மத்வம், காரணத்வம் ச ஶ்ரியஸ்ஸம்யக் ப்ரதிஷ்டிதம் ॥
க்ரந்தேநாऽநேந ச ஸ்ரீமாந் ந்ருஹரிஸ்தத்பதாஶ்ரிதா: ।
பூர்வே ச குரவோ நூநம் ப்ரஸீதேயுரஹம் க்ருதீ ॥

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரவிவரணத்தில் பரதேவதா-பாரமார்த்த்யாதிகாரத்தில் - ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ நாராயணயதீந்த்ர மஹாதேஶிகன் அருளிய ஸ்ரீ தத்த்வதீபிகை முற்றிற்று.

॥ शुभम् ॥







ஸ்ரீ கனகவல்லித்தாயார் – திருவள்ளூர் ஸ்ரீ வேதவல்லித்தாயார் – திருவல்லிக்கேணி





ஸ்ரீ அம்ருதவல்லித்தாயார் – அஹோபிலம் ஸ்ரீ செங்கமலவல்லித்தாயார் – மன்னார்குடி